விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 22 சனிக்கிழமை (05.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 168

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

# கூட்டமைப்புடன் 7ஆம் திகதி பேச்சு மறுநாள் இந்தியாவுக்குப் பயணம்!

## ஜனாதிபதியின் நிகழ்ச்சிநிரல் தயாரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை மறுதினம் 7ஆம் திகதி தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு மறுநாள் 8ஆம் திகதி அவர் இந்தியாவுக்குச் செல்வார் என தெரிவிக்கப்பட்டது. இதற்கேற்றவகையில் ஜனாதிபதியின் நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இருதரப்பும் வெளிப்படையாகப் பேசி பரஸ்பரம் இணக்கத்துக்கு வரவேண்டும்

### ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு மேற்கொள்கின்ற சமாதானப் பேச்சுக்கள் அர்த்த முள்ளவையாக அமைய வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இருதரப்பினரும் அவர்களின் நிலைப்பாடுகளை வெளிப்படையாகப் பேசிப் பரஸ்பரம் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்பதே ஐக்கிய தேசிய கட்சி ஆரம்பத்திலிரு ந்து கொண்டுள்ள நிலைப்பாடாகும் என்று கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு விரைவில் பேச்சு நடத்தும் என்றும் அதற்கான ஏற்பாடுகள்

(15ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இயக்கம் மீதான தடை தொடரும் இலங்கைக்கு பிரித்தானியா உறுதிமொழி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை பிரித்தானியாவில் தொடரும் என்று பிரித்தானியாவின் புதிய அரசு இலங்கைக்கு உறுதிமொழி வழங்கியுள்ளது.

பிரதமர் டி.எம்.ஜயரட்ணவுக்கும் இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் பீற்றர் ஹெயஸ் இற்கும் இடையில் பிரதமர் அலுவலகத்தில் நேற்று நல்லெண்ண சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகள் குறித்தும் பரஸ்பரம் உரையாடப்பட்டது.

இதன்போதே பிரித்தானியாவில் புலிகள் இயக்கம் மீதான தடைதொடரும் என்று தூதுவர் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

அத்துடன் பிரித்தானியாவில் விடுதலைப் புலிகளின் ஆதரவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு இடம் அளிக்கப்பட மாட்டாது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் அவசியம்

### ஐ.நா. பிரதிநிதி அல்ஸ்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச ரீதியானதும், சுயாதீனமானதுமான விசாரணை கள் நடத்தப்பட வேண்டுமென சட்டவிரோத படுகொலைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி பிலிப் அல்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பித்த ஆண்டறிக்கையில் அல்ஸ்டன் இந்த விடயத்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்துடனான பேச்சின் போது பிரிவினைவாதத்தை முன்வைக்கக்கூடாது

### ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தமது இருப்பினைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது பிரிவினைவாதத்தை முன்வைக்கக் கூடாது என ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஹெலஉறுமய கட்சி நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது கலந்து கொண்டிருந்த அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தேரர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விடுதலைப் புலிகளின் கொள்கைகளை முன்வைத்து அவர்களின் நிழலாக செயற்பட எண்ணக் கூடாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொடுத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டைப் பிளவுபடுத்தும் நோக் கத்தை விடுத்து, பேச்சுவார்த்தைக்கு தயாராக வேண்டும்.

அதனைத் தவிர்ப்பார்களானால் தமிழ் மக்களே அதில் பெரிதும் பாதிப்பினை எதிர்நோக்குவதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள். (ச-5)

## ஐ.நா.விசாரணைக் குழு தலைவராக ஹேரகண

(கொழும்பு)

இஸ்ரேலின் மனிதஉரிமைக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தும் ஐக்கியநாடுகள் சபையின் விசாரணையாளர்கள் குழுத் தலைவராக ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப்பிரதிநிதி கலாநிதி பாலித ஹேரகண நியமிக்கப்பட்டுள்ளார்.

பாலஸ்தீனம் மற்றும் ஏனை அராபிய மக்களின் மனித உரிமைகளை இஸ்ரேல் மீறிச் செயற்படுகின்றதைக் குறித்து விசாரணை நடத்த ஐக்கிய நாடுகள் சபை மூன்று பேர் கொண்ட சர்வதேச விசாரணையாளர் குழுவை நியமனம் செய்துள்ளது. இக் குழுவின் தலைமைப் பொறுப்பு இலங்கைக்குக் கிடைத்துள்ளது.

பாலித

(16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று இராமாவில் முகாமுக்கு விஜயம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்திற்கு நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் இராமாவில் நலன்புரிக் கிராமத்திற்குச் சென்று அங்குள்ள மக்களின் நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

இவ் விடயம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இராமாவில் முகாம் மக்களைச் சந்திப்பதற்காக நாம் சென்றோம் அப்போது அங்கு கடமையில் நின்ற படையினர் பலாலி படைத் தலைமையகத்தின் அனுமதியுடன் எம்மை முகாமுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கினர்.

இராமாவில், குடாரப்பு, மாமுனை, வெற்றிலைக்கேணி,

(16ஆம் பக்கம் பார்க்க)

## மலேசிய அரசியல்வாதியை கைது செய்ய இந்தியா முயற்சி

### புலிகளின் ஆதரவாளராம்

(மலேசியா)

மலேசியாவின் தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவரும் பினாங்கு மாநில துணை முதல்வருமான பி.இராமசாமி தமிழ் நாட்டில் இடம் பெற இருக்கும் செம்மொழி மாநாட்டில் பங்கு பற்றுவதற்கு இந்திய அரசு தடை விதிக்கவுள்ளது.

கோயம்புத்தூரில் எதிர்வரும் 23ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை செம் மொழி மாநாடு இடம்பெற உள்ளது. இம் மாநாட்டில் பங்குபற்ற இராமசாமியும் உத்தேசித்துள்ளார்.

இந் நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபி

(16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்.நகர அபிவிருத்திப் பணிகளை அமைச்சர் டக்ளஸ் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பஸ்நிலைய பகுதி உட்பட யாழ். நகரில் கேந்திர நிலையப் பகுதிகளுக்கு நேற்று காலை விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதி நிலைமைகளையும் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் கண்டறிந்தார்.

நாடுதழுவிய ரீதியில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்களும் அமைச்சரின் இவ் நிதியத்தின் போது கண்டறியப்பட்டன.

குறிப்பாக நகரை அழகு படுத்துதல், பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும்படியாக அமைந்துள்ள நடைபாதை கடைகளை அகற்றுதல், தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு நெருக்கடியற்ற பகுதிகளில் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டன.

மேற்படி நடவடிக்கைகள் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நடைபாதை வியாபாரிகளுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் முகமாக பொருத்தமான இடத்தினை தெரிவுசெய்து வழங்குமாறு அங்கு சமுகமளித்திருந்த யாழ்.மாநகர முதல்வருக்கு பணிப்புரைவழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தனியார் பேருந்து ஓட்டுநர்கள் முன்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானித்திற்கமைவாக அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தரிப்பிடங்களை பயன்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் யாழ். மத்திய பஸ்நிலைய பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் வடபிராந்திய பிரதிபோக்குவரத்து முகாமையாளர் கணேசபிள்ளை உள்ளிட்ட இ.போ.ச. பணியாளர்களுடன் கலந்துரையாடி மத்திய பஸ் நிலைய பகுதியில் மேற்கொள்ளப்படும் முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து கொண்டதுடன் அது தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கினார். (ச)


## அன்றாட கட்டடப்பராமரிப்பு வேலைகளுக்கான ஒப்பந்தகாரரைப் பதிவுசெய்தல்

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்படும் கட்டிடத்திருத்த வேலைகள், புதிய கட்டடங்கள் அமைத்தல். நீர்க் குழாய்கள், வடிகால்கள் புனரமைத்தல் மற்றும் அன்றாட திருத்த வேலைகள் தொடர்பான வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் செய்து தருவதற்கான தகுதியுள்ள ICTAD பதிவில் குறைந்தது M7 பதிவுள்ளவர்களை போதனா வைத்தியசாலையில் பதிவு செய்யும்படி கோரப்படுகின்றீர்கள். எதிர்வரும் 14.06.2010 திகதிக்கு முன்னர் நிர்வாக அதிகாரியுடன் அலுவலக நாட்களில் தொடர்பு கொண்டு பதிவுகொள்ளவும்.

பணிப்பாளர்
யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(C-373)


## கரப்பந்தாட்டம்

இறுப்பிட்டி சனசமூக நிலைய ஆதரவில் இறுப்பிட்டி விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டியில் அமரர் திரு.திருமதி நாகேசு இராசமணி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கரப்பந்தாட்டம் (ஓவர்) இன்று முற்பகல் 9.30 மணிக்கு இறுப்பிட்டி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வேலணை பிரதேச சபை செயலாளர் செ.தவராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வேலணை சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.மகேந்திரன், கிராம சேவையாளர் பரமேஸ்வரன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வேலணைப் பிரதேச அமைப்பாளர் போல், சைல் பண்ட் நிறுவன உரிமையாளர் மணிவண்ணன், ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச-3)

## சதுரங்கச் சுற்றுப்போட்டியில் பல்கலைக்கழக மாணவி சாதனை

(யாழ்ப்பாணம்)



மே மாதம் 26 முதல் 31ஆம் திகதி வரை கண்டியில் இடம் பெற்ற முதலாவது கண்டி சர்வதேச தரப்படுத்தல் சதுரங்கச் சுற்றுப் போட்டி 2010 இல் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீட மாணவி செல்வி வித்தியாராணி சிவகுருநாதன் பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்று சாதனை படைத்தார். இவர் யாழ்.பல்கலைக்கழக பெண்களுக்கான சதுரங்க அணியின் கடந்த வருடத்திற்கான தலைவியாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் மேற்படிப் போட்டியில் ஆண்கள், பெண்கள் இருபாலாருக்குமான திறந்தபோட்டியில் 23 ஆவது இடத்தினைப் பெற்றுக் கொண்டார்.

இப்போட்டியில் 273 போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். இதில் இந்திய வீரவீராங்கனைகளும் உள்ளடங்குவர். இப்போட்டியினை 64 Squares International Chess Academy யும் இலங்கை சதுரங்க சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. (ச)

## மின்சாரம் நாளை தடைப்படும்

அவசர திருத்த வேலைகள் காரணமாக குடாநாட்டில் சில பகுதிகளில் நாளைகாலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மின் விநியோகம் இடம்பெறமாட்டா தென மின்சார சபை அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட கால எல்லைக்கு முன்பாக திருத்த வேலைகள் முடிபுற்றால் மின்விநியோகம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசம், வடமராட்சி பிரதேசம் மற்றும் வலிகாமத் தின் பரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, தீவகத்தின் வேலணை பிரதேசம் அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளிலேயே மின் விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)


### பெண் சமையலாளர் தேவை

உரும்பிராயில் இயங்கும் வெண்கள் இல்லத்திற்கு தங்கி நின்று சமையல் செய்வதற்கு அனுபவமுள்ள பெண்பணியாளர் தேவை. தகுதியானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:-
021 222 6391

(இ)

### தவறவிடப்பட்டது

யாழ்.பஸ் நிலையத்தில் 03.06.2010 அன்று மாலை பிரயாணப்பை ஒன்றும் அலுவலக பிரயாணப்பை ஒன்றும் தவறவிடப்பட்டுள்ளது. அதற்குள் கூட்டுறவு திணைக்கள துணுக்காய் ப.நோ.கூ. சங்கம் தொடர்பான கோவைகள் காணப்படுகின்றன. இவற்றினை கண்டெடுத்தவர்கள் 0773126453 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1627)

### காணி விற்பனைக்குண்டு

ஊரெல்லைத்தெரு மீசாலை மேற்கில் ஏ9 றோட்டிலிருந்து 200M இல் 9 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. ஒரு பக்கம் றோட்டும் மறுபக்கம் ஒழுங்கையும் குடியிருப்புக்கள்நெருக்கமாகஉள்ளவீடு கட்ட உகந்த இடம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 300 8708 (1615)

### காணி விற்பனைக்கு

கே.கே.எஸ். றோட் இணுவிலில் (தியேட்டர்லேனில்) சுற்றுமதில், கிணற்றுடன் கூடிய 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0778445323 (1633)



சக்திமயம்

சீர்மேவு யாழ்.கோண்டாவில் ஸ்ரீ பாரதிபுரம்
**திருவருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்**
**வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் - 2010**

*ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்*
*பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவி அடங்கக்*
*காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும் கரும்பும் அங்கை*
*சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கு இல்லையே!*

அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம் வைகாசி 22ம் நாள் (05.06.2010) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற்று 15ம் நாள் ஆனி உத்தர தரிசனத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் யாவரும் ஆசாரசீலர்களாக வருகைதந்து எம்பெருமாட்டியின் திருவருட்கடாட்சம் பெற்று இம்மண்ணில் நல்லவண்ணம் வாழ்வீர்களாக!

**பெருவிழாப் பொலிவு**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வைகாசி | 21 | 04-06-2010 | வெள்ளிக்கிழமை | மாலை | 5.00 மணி | பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும். |
| வைகாசி | 22 | 05-06-2010 | சனிக்கிழமை | பகல் | 11.00 மணி | கொடியேற்றம் |
| வைகாசி | 26 | 09-06-2010 | புதன்கிழமை | மாலை | 6.00 மணி | கைலாசவாகனம் |
| வைகாசி | 29 | 12-06-2010 | சனிக்கிழமை | மாலை | 5.00 மணி | கற்பூரத்திருவிழா |
| வைகாசி | 31 | 14-06-2010 | திங்கட்கிழமை | மாலை | 6.00 மணி | திருமஞ்சம் |
| ஆனி | 02 | 16-06-2010 | புதன்கிழமை | | | கெந்த உற்சவம் |
| ஆனி | 03 | 17-06-2010 | வியாழக்கிழமை | மாலை | 6.00 மணி | சப்பரம் |
| ஆனி | 04 | 18-06-2010 | வெள்ளிக்கிழமை | காலை | 9.00 மணி | தேர்த்திருவிழா |
| ஆனி | 05 | 19-06-2010 | சனிக்கிழமை | காலை | 9.00 மணி | தீர்த்தவாரி |
| | ,, | | ,, | ,, | மாலை 5.00 மணி | திருவூஞ்சல் |
| | ,, | | ,, | ,, | மாலை 6.00 மணி | கொடியிறக்கம் |
| | ,, | | ,, | ,, | மாலை 7.00 மணி | சண்டேஸ்வரர் பூசை |
| | ,, | | ,, | ,, | மாலை 8.00 மணி | ஆசாரிய பூசை |
| ஆனி | 16 | 20-05-2010 | ஞாயிற்றுக்கிழமை | மாலை | 5.00 மணி | பூங்காவனம் |
| ஆனி | 19 | 21-06-2010 | திங்கட்கிழமை | மாலை | 3.00 மணி | தேரடிப்பொங்கல் ஆரம்பம் |

**குறிப்பு**

தினமும் உற்சவம் காலை 9.00 மணிக்கும், மாலை 5.00 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும். உற்சவகாலங்களில் அம்பிகை அடியார்கள் பால், பூக்கள், பழவகை, வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை அம்பாளுக்கு கொடுத்துதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதம குரு: **வேதாகம சிரோன்மணி சிவஸ்ரீ சாமி சிறீஸ்கந்தராஜக் குருக்கள்**
(அகில இலங்கை சமாதான நீதவான், கோண்டாவில்)

ஆலய அர்ச்சகர்: **அன்னதாசன் சிவஸ்ரீ.த.ரமேஷ்ஐயா (கோண்டாவில்)**

ஒலி அமைப்பு : வதனா குழுவினர்
ஒளி அமைப்பு : மகமாரி குழுவினர்
மங்கள வாத்தியம் : திரு.ப.சிவதாஸ் குழுவினர்
பூமாலை : திரு.சி.தயா (இணுவில்)

இங்ஙனம்,
உபயகாரர்களும்,
ஆலய பரிபாலன
சபையினரும்

(1632)

**STUDY IN LEADING UNIVERSITIES&COLLEGES**
**UK,AUSTRALIA,CANADA & FRANCE**

உங்களிடமுள்ள மிகக் குறைந்த தகைமையுடன்

- எங்குமில்லா மிகக் குறைந்த கட்டணங்கள்
- நாம் கூறிய தவணைக்குள் விசா கிடைக்காவிட்டால் உங்கள் முழுப்பணத்தையும் மீளப் பெறலாம்.
- போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட சலுகைகள்

**"A" தரக் கல்லூரி அனுமதிகள்**

- விரைவான நம்பிக்கையான சேவை (45 நாட்கள்)
- 100% விசா உத்தரவாதம்
- போலியான முகவர்களை நம்பி உங்கள் பொன்னான காலத்தையும் பணத்தையும் வீணாக்காதீர்கள்.

**HOT LINE**
**0774715747**
**0779061469**

(1629)

# இன்று ஒரு தகவல்

## இருக்கும் வரையில்...

ஓர் அலுவலகத்தின் தலைமையதிகாரி இருந்தார். அவர் மிகவும் நேர்மையானவர். அலுவலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து வந்தார்.

மேசை, நாற்காலி, குப்பைக்கூடை எல்லாமே அந்தந்த இடத்தில் இருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்வார்.

நாற்காலியின் ஒருகால் உடைந்திருந்தாலும் அதை உடனே பழுதுபார்த்து சரி செய்துவிடுவார்.

அதாவது அவர் எப்படியென்றால், அந்த அலுவலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் தன்னுடையதாக நினைத்து பாதுகாத்து வந்தார்.

அந்த அதிகாரிக்கு ஒருநாள் திடீரென்று மாற்றல் உத்தரவு வந்தது. (Tranfer order)

உடனே தன்னுடைய பெட்டி படுக்கையைக் கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

இப்ப அந்த அலுவலகத்திலுள்ள மேசையைப் பற்றியோ , நாற்காலியைப் பற்றியோ அவர் கவலைப்படவில்லை.

அந்த அலுவலகத்திலிருந்த வரைக்கும் அங்கேயிருந்த எல்லாப் பொருட்களுக்கும் அவரே பொறுப்பு.

அதே போலவே அவர் எல்லாவற்றையும் தன்னுடைதாகப் பாவித்து அக்கறையாக கவனித்து வந்தார்.

இதை "மாரகம்" என்று சொல்கிறார்கள் அவரை அடுத்த ஊருக்கு மாற்றியவுடனே இதுவெல்லாம் தன்னுடையதில்லை. சமுதாயத்தைச் சேர்ந்தது என்று எண்ணம் வந்து விடுகிறது.

தான் வெறும் "பொறுப்பாளி" மட்டுமே (Custodian) என்ற எண்ணம் உருவாகிறது.

இதைக் காப்பாற்றுவது மட்டும் தான் என்னுடைய கடமை– என்ற எண்ணத்தோடு செயல்படுகிறார்.

இதுவும் "மாரகம்" தான்.

ஆனால் "தாரகம்" என்பது வேறு.

அதே அலுவலர் மற்றலாகிப் போகும் போது வீட்டிலுள்ள எல்லாவற்றையும் கட்டி லொறியில் ஏற்றுகிறார். பழைய செருப்பு, துடைப்பம்... எதையும் விட்டு வைக்கவில்லை.

என்ன காரணம்?

எல்லாம் என்னுடையது என்ற எண்ணம்.

ஆக...

எல்லாம் என்னுடையது– என்ற எண்ணம் தாரகம்.

என்னுடையதில்லை– என்ற எண்ணம் மாரகம்.

இந்தத் "தாரகம்", "மாரகம்" இரண்டிற்குமிடையில் தான் மனித வாழ்க்கை ஊசலாடுகிறது என்பது பெரியவர்களின் (சாயி பாபா) கருத்து.

எல்லாவற்றையும் நாம் அனுபவிக்லாம். ஆனால் எதுவும் என்னுடையதில்லை என்று எண்ணம் நமக்கு வரவேண்டும்.

இருக்கிறதெல்லாம் இயற்கை கொடுத்திருக்கிற பிரசாதம்.

அரசாங்கம்கொடுத்திருந்ததை அந்த அதிகாரி காப்பாற்றினார்.

பொறுப்பில் இருக்கும் வரைக்கும் இதையெல்லாம் காப்பாற்ற வேண்டியது தனது கடமை என்று அவர் நினைத்தார்.

அடுத்த ஊருக்குப் போ– என்று சொன்னதும் அங்கேயிருக்கும் எல்லாவற்றையும் உதறிவிட்டுக் கிளம்பிவிட்டார்.

இந்த உலகியல் கடமையை ஒரு யோகமாகச் செய்ய வேண்டும். இந்த உலகத்தில் இருக்கும் வரைக்கும் என்வீடு, என்மனைவி, என் மக்கள்..இது எல்லாமே இயற்கை அல்லது இறைவன் நமக்குக் கொடுத்திருக்கிற பிரசாதம் என்று உணர வேண்டும். அப்படிப் புரிந்து கொண்டு நம்முடைய கடமைகளைச் செய்ய வேண்டும்.

எல்லாம்என்னுடையது என்கிற " மமகாரம்" வந்து விடக்கூடாது.

ஒரு மனிதனுக்கு எது நிரந்தரம்?எதுவரை இருக்கப் போகிறான்? யாருக்கும் தெரியாது. அதனால் வாழும் வரை கடமையாற்றிக் கொண்டே காலம் கழிக்க வேண்டும். எல்லாம் இயற்கை தந்த வரப்பிரசாதம் என்கிற பாவனையோடு வாழக்கற்றுக் கொள்ளவேண்டும்.

இந்தக்காலத்து அதிகாரி ஒருவர். ஜீப்பில் ஏறிக் கொண்டிருந்தார்.

"என்ன விவரம்?" என்று கேட்டார். அவருடைய நண்பர் ஒருத்தர்.

"எல்லாம் என்னுடையது என்று நினைத்தேன். அதன் விளைவு இது" என்றார் அவர்.

"என்ன... அடுத்த ஊருக்கு மாற்றிவிட்டார்களா?" என்றார் அவர்.

"இல்லை... என்னைக் கைது செய்து அழைத்துக் கொண்டு போகிறார்கள்" என்றார் இவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளிநொச்சியிலுள்ள சில கிராமங்களுக்கு விரைவில் முழுமையான மின்சாரவசதி

## வடமாகாண மின் அத்தியட்சகர் தெரிவிப்பு

(வேலணை)

கிளிநொச்சி நகர்ப்பகுதியை அண்மித்த வன்னி மேற்கிலுள்ள சில கிராமங்களுக்கு விரைவில் முழுமையான மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக வடமாகாண மின் அத்தியட்சகர் குகராஜ் தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் நிதியுதவியின் மூலம் மின்சாரம் விநியோகிக்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதற்கான திட் ஆய்வு தற்போது நடை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் உருத்திரபுரம் கிழக்கு, பரந்தன், உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கு, கனகபுரம், கணேசபுரம், திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, தொண்டமான் நகர், பாரதிபுரம்,கிளிநகர் ஆகிய கிராம சேவை அலு வலர் பிரிவிலுள்ள 12 கிராமங்களுக்கு முதல் கட்டமாக மின்சாரத்தை வழங்கவுள்ளதாகவும் இதன் பணிகள் இன்னும் 2 மாதங்களில் முடிவுற்று விடும் எனவும் அவர் தெரி வித்தார்.

இதன்படி இக்கிராமங்களுக்கு லக்ஷபானநீர்வீழ்ச்சி மூலம் கிடைக்கும்மின்சாரமானது சுமார் 20 வருடங்களிற்கு பின்னர் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது . (6-4-22)

## நல்லூர் பிரதேச சபையினால்

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் கீழ் விசேட கழிவகற்றும் திட்டம் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் கீழ் விசேட கழிவு அகற்றும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய இன்று சனிக் கிழமைஜே/110 கிராம சேவையாளர் பிரிவுக் குட்பட்ட சைவப்பாடசாலை ஒழுங் கை, நாவலடி லேன், தாளையடி லேன்,பிள்ளையார் லேன், அம்மன் வீதி, பனிக்கர் வளவு, கம்பஸ் வீதி, மதவடிலேன், சிவசக்தி பாலர் பாடசாலை வீதி, சிவன் அம்மன் வீதி போன்ற இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை ஜே/ 114 கிராம சேவையாளர் பிரிவுக் குட்பட்ட கலாசாலை வீதி, 1, 2, 3 ஆம் ஒழுங்கை, பாற்பண்ணை வீதி, முருகன் வீதி, மகாத்மாஜி பின்புறம், முத்துத்தம்பி பாடசாலை அருகாமை போன்ற இடங்களிலும் இத்திட்டம்முன்னெடுக்கப்படவுள்ளது. (6)

# பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம் பகுதிகளில் மக்கள் வங்கி கிளைகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் பரந்தன், கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பகுதிகளில் நாளை மறுதினம் திங்கட்கிழமை மக்கள் வங்கிக் கிளைகள் திறந்து வைக்கப்படவுள்ளதாக மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் த.க. ஆனந்தராசா அறிவித்துள்ளார்.

இதில் பரந்தன் கிளை காலை 10.15 மணிக்கும் கிளிநொச்சிக் கிளை காலை 11.30 மணிக்கும் மாங்குளம் கிளை மாலை 3.45 மணிக்கும் திறந்து வைக்கப்படவுள்ளது எனவும் இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ. கருணாஜீவ, பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொதுமுகாமையாளருமான பி.வி. பத்திரண, மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக அவர் அறியத் தந்துள்ளார். (6)



யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது பிரிவினருக்கான உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் சம்பியனான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வீரர்களை இப்படத்தில் காணலாம் (படம்:- எஸ். செல்வதீபன்)

# இராசி பலன்

05-06-2010
(வைகாசி 22, சனிக்கிழமை)
அட்டமி பிற்பகல் 3.44 மணிவரை
புரட்டாதி பின்னிரவு 5.07 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
அட்டமி - நவமி.


| | |
|---|---|
| மேடம் | குடும்ப சுகம், விருந்துபசாரம், எடுத்த காரியம்கைகூடும், பொருள் சேர்க்கை. |
| இடபம் | தூரதேசச் செய்தி, பாராட்டு, தொழில் ஆர்வம், சிந்தனை மிகுதி. |
| மிதுனம் | ஆன்றோர் சந்திப்பு, உடல் உழைப்பு, ஆரோக்கிய குறைவு, முயற்சி தாமதம். |
| கடகம் | எதிர்பாராத அச்சம், தொழில் நன்மை, வீண்பகை, அபகீர்த்தி. |
| சிங்கம் | வாகன வசதி, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம், காரிய அனுகூலம். |
| கன்னி | பணவரவு, சுகவாழ்வு, தொழில் நன்மை, முயற்சி கைகூடும். |
| துலாம் | கௌரவக்குறைவு, காரிய இடையூறு, பணவிரயம், உறவினர் சந்திப்பு. |
| விருச்சிகம் | பயந்த சுபாவம், பயணம் முயற்சி தாமதம், புதிய விடயம். |
| தனுசு | கூட்டு முயற்சி, பணவருவாய், அந்நியர் சந்திப்பு, கீர்த்தி. |
| மகரம் | குடும்பக்கவலை, பொருள் விரயம், எடுத்காரியம் தாமதமாகும், விவாதம். |
| கும்பம் | நண்பர்கள் உதவி, சயனசுகம், முயற்சி கைகூடும், தெய்வ சிந்தை. |
| மீனம் | தந்தை வழி உறவு, கோபப் படுதல், முயற்சி தாமதம், சுப செலவு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 110 | 120 | 80 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 100 | 120 | 95 |
| கரட் | 170 | 180 | 150 |
| பூசனி | 40 | 80 | 50 |
| புடோல் | 40 | 60 | 55 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 90 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 45 |
| பயற்றங்காய் | 100 | 120 | 125 |
| லீக்ஸ் | 120 | 140 | 140 |
| பீற்றூட் | 80 | 100 | 80 |
| கறிமிளகாய் | 180 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 190 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 40 |
| கீரை – 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |





பருத்தித்துறை பிரதேசத்தில் sond நிறுவனத்தினால் செயற்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டம் தொடர்பான திட்ட அறிமுகக்கூட்டம் அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் செந்தூரராசாவினால் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அரச அதிகாரிகள் மற்றும் கிராமமட்ட பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை காலை 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை மாலை வேட்டைத்திருவிழாவும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை பகல் தீர்த்தோற்சவமும் இரவு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (4)

## தென்மராட்சியில்
# மாதாந்த உதவிப்பணம் பெறும் பயனாளிகளுக்கான அறிவித்தல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் பயனாளிகளுக்கான மீளாய்வு நடவடிக்கைகள் சாவகச்சேரி பிரதேச செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

உதவிப் பணம் பெறும் பொது மக்கள் பின்வரும் திகதிகளில் தத்தமது கிராம அலுவலர் காரியாலங்களில் தொடர்பு கொண்டு மீளாய்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

இதில் எதிர்வரும் 7 ஆம் திகதி- ஜே/302, ஜே/303 பிரிவிலும், 8ஆம் திகதி - ஜே/326 பிரிவிலும்,10 ஆம் திகதி - ஜே/325, ஜே/296 பிரிவிலும், 11 ஆம் திகதி- ஜே/299, ஜே/298 பிரிவிலும், 14 ஆம் திகதி ஜே/337 பிரிவிலும்,15 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை ஜே/333, ஜே/329, ஜே/330 பிரிவிலும்,17 ஆம் திகதி வியாழக்கிழமை ஜே/347 பிரிவிலும் இடம்பெறவுள்ளது.

மீளாய்வுக்குவரும்பொதுமக்கள்சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் சமூகமளிக் குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (6-29)

## லோக கல்யாண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனைமையத்தினால் நடத்தப்படும் ஸ்ரீ அம்மா பகவானின் 34 ஆவது லோக கல்யாண நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீ அம்மாபகவான் பாதபூசையை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து ஸ்ரீ கல்கி பகவானின் முக்தி தீட்சையை பெற்றுக் கொண்ட பக்தர்களினால் ஸ்ரீ அம்மா பகவானின் அருட்தீட்சையும் ஆசியும் வழங்கப்படவுள்ளதால் பக்தர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (4)

## திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நியமனம்

(கரவெட்டி)

நிதியமைச்சின் செயலாளரால் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேசங்களுக்கான திடீர் மரண விசாரணை அதிகாரிகளாகவும் சமாதான நீதவான்களாகவும் இருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டிபிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரியாக கரணவாய் வடக்கைச் சேர்ந்த வி. பாஸ்கரன், பருத்தித்துறை பிரதேசத்திற்கான திடீர் மரண விசாரணை அதிகாரியாக பருத்தித்துறை 4.ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த தயான் அன்ரலா ஆகியோர் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். (6-24)

## கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் .கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் பேச்சுப் போட்டி, சதுரங்கப் போட்டி, கூடைப்பந்தாட்டப் போட்டி, 7 பேர் கொண்ட உதைப்பந்தாட்டப்போட்டி ஆகியன இன்று சனிக்கிழமை கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் காலை 9 மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கிடையேயான பேச்சுப் போட்டி நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை மாணவர் களை குறிப்பிட்ட நேரத்திற்கு சமூகமளிக் குமாறு கல்லூரி அதிபர் கேட்டுக் கொண்டுள் ளார்.

இதேவேளை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள தனிநபர்களுக்கு இடையிலான சதுரங்கப் போட்டியில் பெண்கள் பிரிவில் 11 பாடசாலைகளும் ஆண்கள் பிரிவில் 8 பாடசாலைகளும் பங்குபற்றவுள்ளன.

அத்துடன் 19 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் பெண்களுக்கான போட்டி காலை 9மணிக்கும் ஆண்களுக்கான போட்டி பிற்பகல் 2மணிக்கும் நடைபெறவுள்ளது.

மேலும் 7 பேர் கொண்ட உதைப்பந்தாட்டப் போட்டிகள் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாக கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார். (6-4)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் முகாமையாளர் சம்மேளனமும் இலங்கை வடபிராந்திய பொறியிலாளர் சங்கமும் இணைந்து கிளீன்வெல் அனுசரணையுடன் நடத்தப்படும் திண்மக் கழிவும் கழிவுநீர் பரிகரிப்பும் என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் 6 மணிவரை பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர். முத்துரட்னானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் இத்துறைசார் நிபுணத்துவம் பெற்ற டார்சீ சர்வதேச நிறுவனத்தின் பொறியியலாளர் ஆர். செல்வக்குமரன் கருத்துரை வழங்கவுள்ளார். (6-4)

# சட்டவிரோதமான முறையில் பனை மரங்கள் வெட்டப்படுவதாக மக்கள் விசனம்

(ஆனைக்கோட்டை)

தெல்லிப்பழை ஜே/238 கிராமசேவகர் பிரிவிலுள்ள கட்டுவன் ஐயனார் கோவிலடியில் சட்டவிரோதமான முறையில் பனை மரங்கள் வெட்டப்படுவதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் அண்மையில் சட்ட விரோதமான முறையில் பனைமரங்களை வெட்டிய நபர்களை குறித்த பிரதேச மக்கள் தடுத்தமையால் அந்நபர்கள் வெட்டிய 3 மரங்களையும் விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக ஜே/238 கிராம சேவையாளர் மற்றும் தெல்லிப்பழை பிரதேசசெயலருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் குறித்த பிரதேசம் மிதிவெடி அபாயமான பிரதேசமாக குறிப்பிடப்பட்டிருந்தும் மக்கள் அங்கு நடமாடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவ்வாறான சட்டவிரோதமான நடவடிக்கைகள் ஏற்படாம லிருக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-23)

## மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

யாழ். தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாயக்கை பிள்ளையார் கோவில் மைதானத்தில் பாடசாலை அதிபர் தா.ராமஜயம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்விவலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து சிறப்பிகவுள்ளதுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களினை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை ஆசிரியர் திருமதி.ஜமுனா நந்தகுமார் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (4)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை அதிபர் செல்வி. ந.பிரதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் ஆசியுரையை பிரம்மஸ்ரீ வி. சிவானந்தசர்மா வழங்கவுள்ளார். (6-4)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way French Classes**

சர்வதேச மொழியான **French** மொழி வகுப்புக்கள் French Emabassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.


பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட **ALLIANCE FRANCAISE** யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்

மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(1531)

ஜதிலயா நுண்கலை பயிலகத்தினால் அண்மையில் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் 'லயசங்கமம்' நடன இன்னிசை அரங்க நிகழ்வு நடத்தப்பட்டது. இதில் ஜதிலயா நுண்கலைப் பயிலக இயக்குனரும் நடன ஆசிரியருமான செல்வி காயத்திரி இராசையாவின் நெறியாள்கையில் உருவான அவருடைய மாணவிகளின் நடன நிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.

## எதிர்காலத்தில் பாடசாலைகளின்
# தரப்படுத்தலில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது
### கல்வி அமைச்சர் தெரிவிப்பு



பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும்போது இடம்பெறும் இடப்பற்றாக்குறையை தீர்ப்பதற்கு புதிய வழிமுறையை மேற்கொள்ளவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக எதிர்காலத்தில் பாடசாலைகளின் தரப்படுத்தலில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய சகல பாடசாலைகளும் ஆரம்பப் பிரிவு பாடசாலைகள் மற்றும் இரண்டாம் நிலை பாடசாலைகளாக தரப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் இரண்டாம் நிலை பாடசாலைகளில் இரண்டாம் மொழியில் அல்லது மூன்று மொழிகளிலும் கற்பிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. (6-4)

## பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட
# 19 கிராம அலுவலர் பிரிவுகளில் வாக்காளர் கணக்கெடுப்பு பணிகள்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பத்தொன்பது கிராம அலுவலர் பிரிவுகளிலும் வாக்காளர் கணக்கெடுப்பு வேலைகளுக்கான படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட வாக்காளர் பதிவு வேலைகள் மேற்கொள்வதற்காக விசேடமாக நியமிக்கப்பட்டுள்ள உதவி தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ். கருணாநிதி பூநகரிப் பிரதேச கிராம அலுவலர்க்கான படிவங்களை வழங்கியுள்ளதுடன் கணக்கெடுப்பு சம்பந்தமான அறிவுரைகளையும் கடந்த புதன்கிழமை வழங்கியுள்ளார்.

இதேவேளை கடந்த தசாப்தங்களாக கிளிநொச்சி மாவட்ட வாக்காளர் இடாப்புக்கான திருத்த வேலைகள் நடைபெறாதிருந்தன.

கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் நிர்வாகம் வழமைக்கு திரும்பியதைத் தொடர்ந்து அம் மாவட்டத்திலுள்ள தகுதியான வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக கிளிநொச்சி செயலகத்தில் தேர்தல் திணைக்களத்தின் உப அலுவலகமொன்று கடந்த புதன்கிழமை நண்பகல் பன்னிரண்டு மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

தேர்தல்கள் திணைக்களத்தின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி நாடாவை வெட்டி வைபவ ரீதியாக திறந்து வைத்தனர். (6)

# இலங்கையின் சுபீட்சமான எதிர்காலத்துக்கு சீனக்குடியரசின் ஒத்துழைப்பு வழங்கப்படும்
### தூதுவர் யாங் க்ஷியூபிங் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டு இலங்கை அரசு அதன் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்காக மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகளுக்கு மக்கள் சீனக்குடியரசின் பூரண ஒத்துழைப்பு பெற்றுத்தர வேண்டுமென்று இலங்கைக்கான சீனத்தூதுவர் யாங் க்ஷியூபிங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தீர்க்கதரிசன மிக்க செயற்பாடுகள் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளதாகவும் பாராட்டைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், அதற்காக தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை சந்தித்த போதே சீனத் தூதுவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கம் தெளிவான செயற்பாட்டுடன் முன்னோக்கிச் சென்றமை பாராட்டத்தக்கது எனவும் அது தொடர்பில், சீன அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது என்றும் இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய அபிவிருத்திப் பணி களுக்கு இயன்ற அனைத்து ஒத்துழைப்புகளையும் பெற்றுத் தர சீனா தயாராக உள்ளதெனவும் கூறினார். (6)


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 27.05.1949 மறைவு 06.05.2010

அமரர்

**திருமதி சரலோகநாதன் செல்வராணி**

06.05.2010 இல் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்தியம் இன்று (05.06.2010) எமது இல்லத்தில் நடைபெற இருக்கிறது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

கணவன், பிள்ளைகள்,
தாயார், மருமகள், பேரன்,
உறவினர்.

(C-371)


## சேவைமூப்பு அடிப்படையிலேயே
# ஐ.தே.கட்சி தலைமைத்துவ பதவிக்கு நியமனங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்
### ரவிகருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டுமென கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கோட்டை பிரதேசத்தில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வாக்களிப்பு மூலம் தலைவர்களை தெரிவதில் அர்த்தமில்லை எனவும் சேவைமூப்பு அடிப்படையில் தலைமைத்துவப் பதவிக்கு நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அரசியல் குழந்தைகளுக்கு பாலூட்ட வேண்டாம் என அவர், கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடம் கோரியுள்ளார்.

அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் ஒன்றிணைந்து கட்சியை கட்டி எழுப்புவதற்கான தருணம் உருவாகியுள்ளதெனவும் பிரிவினைகளை ஏற்படுத்திக் கொள்வதில் அர்த்தமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (6)


## இலங்கை மின்சாரசபை - யாழ்.பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு 06.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம்.

அல்லைப்பிட்டி, வேலணைப் பிரதேசம்

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
2010.06.04

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சார சபை

(C-367)

# சுற்றாடல் பாதுகாப்பும் மரநடுகையும்

## இன்று உலக சுற்றாடல் தினமாகும்



இன்றைய மனிதன் தான் வாழ்ந்த இயற்கையை விட்டு விலகி வெகுதூரம் வந்து விட்டான். இயற்கையான வாழ்வு முறைகளை விட்டு செயற்கையான வாழ்வு முறைகளில் மூழ்கிவிட்டபடியால் இயற்கையின் பலவிதமான தண்டனைகளுக்கு ஆட்படுகின்றான்.

முன்னர் இல்லாத பல நோய்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. புதிது புதிதாய் தோன்றும் பல பூச்சி புழுக்களினதும் நுண்



ணுயிர்களினதும் தாக்கங்ககளுக்கு உள்ளாகி அழியவேண்டியுள்ளது. புதிய புதிய மருந்துகளை கண்டுபிடிக்கவேண்டியுள்ளது.

தாம் வாழும் சூழலைப் பேணிக்கொண்டு அதனோடியைந்த வாழ்வை வாழ்ந்திருந்தால், இன்று நாம் முகம் கொடுக்கும் பல இன்னல்களைத் தவிர்த்திருக்கலாம்.

இன்றைய பெரும் பிரச்சினை என்ன வெனில் பூமித்தாய் வெப்பமடைதல் என்பதாகும். இதனை இப்போதாவது உணர்ந்து தடுப்பு நடவடிக்கைகளை அனைவரும் சேர்ந்து எடுக்காவிட்டால் மனிதகுலம் மட்டுமல்ல மற்ற எந்த உயிரினமும் வாழமுடியாத இடமாக பூமி மாறி விடும்.

பல வருடங்களுக்கு முன்னர் இருந்ததை விட வளிமண்டலம் வெப்பமாகிக் கொண்டு வருவதைப் பலரும் உணர்ந்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிப்பதாகும்.

இயற்கை காடுகள் அதிகமாக இருந்த போதிலும் மரங்கள் தறித்து அழிக்கப்படாமல் இருந்த போதும் தாவரங்கள் பகல் நேரத்தில் உணவு தயாரித்தல் செயற்பாட்டிற்காக வளிமண்டலத்திலிருந்து உள்ளெடுக்கப்படும் காபனீரொட்சைட்டின் அளவும் அதிகமாக இருந்தது; வளிமண்டலத்தில் வெப்பம் அதிகரிக்காமல் இருந்தது.

மனிதன் காட்டை எப்போது வகைதொகையின்றி அழிக்கத் தொடங்கினானோ அப்போதே வளிமண்டலம் வெப்பமடையத் தொடங்கிவிட்டது. நகரமயமாக்கம் , தெருக்களை அகலப்படுத்தல் போன்ற பல காரணங்களுக்காகவும் பாரிய மரங்கள் தறிக்கப்படுகின்றன.

நிசாப்புயல், லைலாப்புயல், காட்டுத்தீ போன்ற இயற்கை அனர்த்தங்களும் தாவரங்களை அழிக்கின்றன. இவற்றோடு மனிதன் விறகுத் தேவைக்காகவும் வேறு தேவைக்காகவும் மரங்களை வெட்டி அழிக்கின்றான். இடப்பெயர்வுகளின் போது மற்றவர்களின் வளவுகளில் நின்ற மா,பலா, தேக்கு, புளி, இலுப்பை போன்ற பயன்தரு மரங்களை வெட்டியவர்கள் ஏராளம்.

தமது வாழ்நாளில் எந்த மரத்தையும் நட்டு பேணிவளர்க் காதவர்கள் நமது மூதாதையர் வைத்து வளர்த்த மரங்களை வெட்ட என்ன உரிமை இருக்கிறது?

இவற்றை எல்லாம் ஈடுகட்ட மரநடுகைத் திட்டத்தை அனைவரும் முன்னெடுப்பதே நல்லது எனலாம். சிறுவர்களும் பெரியவர்களும் பயன்தரு மரங்களை நட்டு கூடுகட்டி நீர் ஊற்றி பராமரித்து வளர்க்க வேண்டும். மரக்கன்றுகளை உண்டாக்கி அவற்றை வேண்டியவர்களுக்கு இலவசமாகக் கொடுத்து நட வைத்தவர்கள் நம்மிடையே வாழ்ந்த மில்க்வைற் கனகராசா அவர்கள்.

வெதுப்பகங்களில் ஒவ்வொரு நாளும் புளியமரம் போன்ற பெரிய மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே வெதுப்பக உரிமையாளர்கள் மரநடுகைத் திட்டத்தையும் மேற்கொண்டு ஊக்கப்படுத்த வேண்டும்.

எவரெவர் மரங்களை வெட்டிப் பயன்படுத்துகிறார்களோ அவர்கள் அவற்றிக்கு ஈடாக பல மரங்களை நாட்ட வேண்டும். ஒரு மரத்தை வெட்டினால் ஒன்பது மரத்தை நடுங்கள்.

இரா.சந்திரசேகர சர்மா M.A.
(முன்னாள் ஆலோசகர்,சுற்றாடல்பாதுகாப்பு FORUT)

கோவில்களில் திருவிழாவை செய்யும் போது நவதானியங்களை விதைக்கிறார்கள். யாகத்தில் நவதானியங்களை விதைத்து தேர்த்திருவிழாவுக்கு அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவின் போது அவற்றைப் பிடுங்கி அனைவருக்கும் கொடுக்கிறார்கள். நவதானியங்களின் முக்கியத்துவத்தையும் அவற்றை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் மக்கள் மனதில் விதைப் பதே இதன் நோக்கமாகும். இதைப் புரிந்து கொண்டு செயற்படுவோமாக.

# வன்னி முகாம்களில் மக்களை திண்டாடவிட்டு தலைநகரில் ஆரவாரம் செய்வது அநாகரிகமானது

## ரில்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

வன்னி முகாம்களில் மக்களை திண்டாட விட்டு தலைநகரில் இந்திய நட்சத்திரங்களுடன் இலங்கை அரசாங்கத் தரப்பினர் ஆரவாரம் செய்து மகிழ்கின்றமை பொது மக்களை ஏமாற்றும் அரசாங்கத்தின் நடிப்பிற்கு இந்திய சர்வதேச திரைப்படவிழாவில் விருது வழங்கி கௌரவிக்க வேண்டும் என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் பிரச்சினைகளுக்கோ நாட்டின் தேசிய பிரச்சினைக்கோ தற்போதைய அரசாங்கத்தினால் ஒருபோதும் தீர்வை வழங்க முடியாது. எரிபொருள்களின் மீதான வரியை குறைக்காது இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான வரியைக் குறைப்பதால் சாதாரண பொது மக்களுக்கு என்ன பயன்? என்று இக்கட்சி கேள்வி யெழுப்பியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் மற்றும் ஐபா நிகழ்வுகள் தொடர்பாக நேற்று முன்தினம் தெளிவுபடுத்துகையிலேயே ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதுபற்றி தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கூறுகையில், நாட்டிற்கு தேவையான அத்தியாவசியப் பணிகள் மீது கவனம் செலுத்தாது அநாவசியமான வேலை செய்து காலத்தை வீணடிப்பதுடன் அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் செயற்படுகின்றது.

இந்திய சர்வதேச திரைப்பட விருது வழங்கும் நிகழ்வை இலங்கையில் நடத்துவதால் எவ்விதமான நன்மையும் நாட்டுக்கு கிடைக்கப் போவதில்லை.

வாழ்க்கைச்செலவு அதிகரித்த போது மக்கள் கஷ்டப்படுகின்றார்கள். வடக்கில் அகதி முகாம்களில் இன்றும் உணவின்றி சிறை வாழ்க்கையை தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள்.

நாட்டின் அபிவிருத்திப் பணிகள் முடங்கிப் போயுள்ளன. சம்பள உயர்வை கோரி ஊழியர்கள் போராட்டம் நடத்துகின்றார்கள். தொழில் வழங்குமாறு வேலையற்ற பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

அதேபோன்று உள்நாட்டில் சுகாதாரம், கல்வி போன்ற துறைகளில் பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இதை தவிர இலங்கைக்கு எதிராக சர்வதேசம் மீண்டும் மனித உரிமைகள் பிரச்சினையை விசாரிக்க உள்ளது.

இவ்வாறு நாடு பல சிக்கல்களில் இருக்கும் போது இந்திய திரைப்பட நட்சத்திரங்களுடன் அரச தரப்பினர் ஆரவாரம் செய்வது அநாகரீகமானது.

கடந்த காலங்களில் தேசியப் பிரச்சினைகளை மூடிமறைக்க உள்நாட்டு யுத்தத்தையும் தேர்தல்களையும் காரணம் காட்டி வந்த அரசாங்கம் தற்போது ஐஃபா நிகழ்வுகளால் பொது மக்களின் அவதான த்தை திசை திருப்புகின்றது.

அரசாங்கத்தின் இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளினால் இலங்கைக்கு அபிவிருத்தியடைய கிடைத்த சந்தர்ப்பங்கள் கைநழுவப் போகின்றன என்று அவர் சொன்னார். (6)

# நூலக அபிவிருத்தி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் நூலக அபிவிருத்தி செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமையும் நாளைமறுதினம் திங்கட்கிழமையும் வடமராட்சி வலய ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு திருகோணமலையிலிருந்து வருகைதரும் எஸ்.சந்திரகாந்தன் வளவாளராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் வடமராட்சி வலயப் பாடசாலை ஆசிரிய நூலகர்கள் மற்றும் நூலகப் பொறுப்பாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (6-4)

# துருக்கிய கப்பல் தலைவருக்கு ஒரு கோடி ரூபா அபராதம் விதிப்பு

(கொழும்பு)

திருகோணமலை கடற்பரப்பில் சல்பூரிக் அமிலத்தை பரப்பி சூழலை மாசுபடுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட துருக்கி நாட்டு கப்பல் தலைவருக்கு, ஒரு கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில், இந்த தீர்ப்பு வழங்கப் பட்டது.

திருகோணமலை துறைமுகத்தில் இருந்து 12 கிலோமீற்றா தொலைவில், கடந்த ஏப்ரல் மாதம் இந்த துருக்கிய கப்பல் மூழ்கியது.

இதனால் 4 நாட்களுக்கு கப்பலில் இருந்து சல்பூரிக் அமிலம் கடற்பரப்பில் கலக்கப்பட்டது.

இந்த நிலையில் இதனை கடற்சூழலை மாசடைதலை தடுக்கும் சட்டத்தின் கீழ் குற்றமாக அறிவித்து, சட்டமா அதிபரினால் இந்த கப்பல் தலைவருக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இதனை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கப்பல் தலைவருக்கு ஒரு கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (6)

## அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் ஏற்படுத்தக் கூடாது -இ.தொ.கா. கோரிக்கை

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் ஏற்படுத்தக் கூடாது என ஆளும் கூட்டணிக் கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

புதிய அரசியல் சாசன திருத்தங்களினால் பெருந்தோட்ட தமிழ் மக்களின் உரிமைகள் பாதிக்கப்படலாம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.சந்திரன் தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போது அமுலில் உள்ள அரசியல்சாசனத்தைமாற்றவேண்டாம்எனகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது காணப்படும் பிரதேச செயலகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோரியுள்ளது.

தற்போது நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகங்கள் காணப்படுவதாகவும் இதனை 12 ஆக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் பெருந்தோட்ட தமிழ் மக்களை தெளிவுபடுத்தும் கருத்தரங்குகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## பொன்சேகா உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவின் விசாரணை ஒத்திவைப்பு

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக நிறுவப்பட்டுள்ள முதலாவது இராணுவ நீதிமன்றத்தின் வழக்கு விசாரணைகளை இடைநிறுத்தி, மேன்முறையீட்டு நீதிமன்றம் இட்ட உத்தரவை விலக்கிக் கொண்ட தீர்மானத்திற்கு எதிராக அவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த ஆட்கொணர்வு மனு எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரதியைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதால் இந்த மனு தொடர்பான வாதங்களை முன்வைப்பதற்கு வேறொரு தினத்தை வழங்குமாறு ஜெனரல் பொன்சேகா சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார் இதன் பின்னரே மனுவை ஆராய்வது ஒத்திவைக்கப்பட்டது.

நீதியரசர்களான ஷிராணி பண்டாரநாயக்க, பி.ஏ. ரத்னாயக்க, எஸ்.ஐ.இமாம் ஆகிய மூவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு சரத் பொன்சேகாவின் மனுவை ஆராய்வதற்காக கூடியது.

தமக்கெதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக இராணுவத் தளபதி நியமித்த முதலாவது இராணுவ நீதிமன்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை முடியும் வரை அதன் வழக்கு விசாரணைகளை இடைநிறுத்துமாறு ஜெனரல் சரத் பொன்சேகா உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (6)

### செனட் சபை உருவாக்கம் குறித்த

## அரசியல் சாசனத் திருத்தம் அடுத்த ஆண்டில் அமுல்படுத்தப்படும்

### அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

செனட் சபை உருவாக்கம் தொடர்பான அரசியல் சாசன திருத்தம் அடுத்த ஆண்டில் அமுல்படுத்தப்படும் என அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

செனட் சபை உருவாக்கம் குறித்த திருத்தங்களை இந்த ஆண்டில் அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டிருந்த போதிலும் தற்போது அந்தக் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தலைமையில், அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டணி கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது, செனட் சபை உருவாக்கம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் தவணைக் காலத்தை நீடித்தல் மற்றும் 17ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக ஆணைக்குழுக்களை நிறுவுதல் போன்ற விடயங்கள் தொடர்பான திருத்தங்கள் இந்த ஆண்டில் முன்வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (6)

### இந்திய திரைப்பட விழாவில் கலந்துகொள்ள

## தமிழ் திரையுலகினர் எவரும் இதுவரை இலங்கை வரவில்லை

### சுற்றுலா ஊக்குவிப்பு பணியக பணிப்பாளர்

(கொழும்பு)

இந்திய சர்வதேச திரைப்பட விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக கோலிவூட் (ஹிந்தி) திரைப்படத்துறையை நடிகர், நடிகைகள் 100 பேர் நேற்று முன்தினம் இலங்கை வந்துள்ளனர் என்று இலங்கைச் சுற்றுலாஊக்குவிப்புபணியகத்தின்பணிப்பாளர் திலிப் முதாதெனிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெறும் இந்த விழாவுக்கான அனைத்து நுழைவுச் சீட்டுகளும் விற்பனையாகியுள்ளன. அதிகளவான இலங்கையர்கள் இந்த விழாவை கண்டுகளிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இந்தித் திரையுலகத்தின் பிரபல நடிகரான அமிதாப்பச்சன் விழாவில் கலந்து கொள்வது குறித்து இதுவரை உறுதிப்படுத்த முடியவில்லை. அத்துடன் தமிழ் திரையுலகைச் சேர்ந்த எந்த நடிகரும் விழாவில் கலந்து கொள்வதற்காக இதுவரை இலங்கை வரவில்லை எனவும் இந்திய தமிழ் திரையுலகத்தினரை விழாவில் கலந்து கொள்ளுமாறு விசேட அழைப்புகள் எதனையும் விடுக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார். (6)

## 05.06.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- *1864*-அமெரிக்க உள்நாட்டுப் போர்: வெர்ஜீனியாவின் பியெட்மொண்ட் நகரில் இடம்பெற்ற போரில் அமெரிக்கப் படைகள் கூட்டமைப்புப் படைகளைத் தோற்கடித்து கிட்டத்தட்ட ஆயிரம் பேரை சிறைப்பிடித்தனர்.
- *1912*- ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் கியூபாவில் இறங்கினர்.
- *1946*- சிக்காக்கோவில் உணவுசாலை ஒன்று தீப்பிடித்ததில் 61 பேர் கொல்லப்பட்டனர்.
- *1956*- இலங்கை பாராளுமன்றத்தில் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- *1959*- சிங்கப்பூரின் முதலாவது அரசு பதவியேற்றது.
- *1967*- இஸ்ரேலிய வான் படையினர் எகிப்து, ஜோர்தான், சிரியா ஆகியவற்றின் மீது தாக்குதலை ஆரம்பித்தன.
- *1968*- ஐக்கிய அமெரிக்காவின் அரசுத்தலைவருக்கான வேட்பாளர் ரொபேர்ட் கென்னடி பாலஸ்தீனர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் அடுத்த நாள் உயிரிழந்தார்.
- *1969*- அனைத்துலக கம்யூனிஸ்டுகளின் மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமானது.
- *1977*-செஷெல்சில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- *1977*- முதலாவது தனிக்கணனி அப்பிள் II விற்பனைக்கு விடப் பட்டது.
- *1979*- இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி அரசுடமையாக் கப்பட்டது.
- *1984*-இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி சீக்கியர்களின் பொற்கோயிலில் தாக்குதல் நடத்த உத்தரவிட்டார்.

**பிறப்புகள்**

- *1898*- ஃபெடரிக்கோகார்சியா லோர்க்கா, ஸ்பானிய எழுத்தாளர் (இ1936)
- *1925*-வ.அ.இராசரத்தினம், ஈழத்து எழுத்தாளர்.
- *1975*- சிட்ருனாஸ் இல்கவுச்காஸ், லித்துவேனிய கூடைப்பந்து ஆட்டக்காரர்.


**இறப்புகள்**

- *1910*- ஹென்றி, அமெரிக்க எழுத்தாளர்(பி.1862)
- *1974*- சிவகுமாரன்,சயனைட் அருந்தி உயிர் நீத்த முதலாவது ஈழப்போராளி.
- *2002*- மு.சிவசிதம்பரம், தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்.
- *2004*-ரோனால்டு ரேகன், அமெரிக்க முன்னாள் அதிபர். (பி.1911)

**சிறப்புநாள்**


- உலக சுற்றுச்சூழல் நாள்
- டென்மார்க்- அரசியல் நிர்ணய நாள்.
- சேஷெல்ஸ்-விடுதலை நாள்

**1974- ஈழப்போர்: சிவகுமாரன் உரும்பிராயில் பொலிஸார் சுற்றி வளைத்த போது சயனைட் அருந்தி மரணமடைந்தார். இவர் ஈழப் போரில் முதன் முதலில் சயனைட் அருந்தி வீரச்சா வையடைந்தவர்.**



# நித்தியானந்தர் -ஸ்ரீஸ்ரீரவிசங்கர் மோதலால்

# துப்பாக்கிக் குண்டு பாய்ந்ததா?



" உண்மையான சந்தோசம் நிகழ்காலத்தில் மட்டுமே இருக்கிறது. கடந்தகால சம்பவங்களிலும் எதிர்காலக் கேள்விக் குறியிலும் உங்களைத் தொலைத்துவிடாதீர்கள்'' என மேடைதோறும் உபதேசம் பண்ணிவரும் "வாழும் கலை" அமைப்பின் நிறுவனரான ஸ்ரீஸ்ரீரவிசங்கர் குருஜி "என்னைத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப் பார்த்தார்கள்'' என பகீர் புகாரை எழுப்பி... ஆன்மீகத் தரப்பை பதட்டத்தில் ஆழ்த்திக்கொண்டிருக்கிறார்.

பெங்களூர் கனகபுரா சாலையில் இருக்கும் அவரது ஆசிரமத்தின் தலைமயகத்தில்... சற்சங்க நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கிளம்பியபோதுதான் இந்த கொலை முயற்சி நடந்ததாக ரவிசங்கர் சொல்கிறார்.

சம்பவம் பற்றி நாம் துருவியபோது பரபரப்புத் தகவல்கள் ஏகத்துக்கும் கிடைத்தன. அவற்றைப் பார்ப்பதற்கு முன்... இந்த





ரவிசங்கர் குருஜி யார்? என்பதைப் பார்ப்போம்.

பெங்களூரில் ஆசிரமம் அமைத்துக் கொண்டிருக்கும் இந்த ரவிசங்கரருக்கு சொந்த ஊர்.... நம் தமிழகத்தில் கும்பகோணத்துக்கு அருகில் இருக்கும் பாபநாசம் தான். தமிழ் பிரமாணக்குடும்பத்தில் பிறந்தவர் இவர். 1956 மே 13 இல் பிறந்த ரவிசங்கருக்கு இப்போது வயது 5. இவரது அப்பா வேங்கடரத்தினம் சமஸ்கிருதப் பண்டிதர். மே 13 ஆதிசங்கரர் பிறந்தநாள். அந்தநாளில் பிறந்ததால் இவருக்கு சங்கரர் நினைவாக சங்கர் என்ற பெயரையே இவரது பெற்றோர் சூட்டினர்.

இயற்பியல் பட்டப்படிப்பு படித்த ரவிசங்கரருக்கு மாணவப் பருவத்திலேயே ஆன்மீகநாட்டம் வந்துவிட்டது. மகரிஷி மகேஷ் யோகி என்பவரை தனது குருவாக ஏற்றுக் கொண்டு ஆன்மீகத் தேடலில் இறங்கினார். 82 இல் கர்நாடகாவுக்குப் பயணமான ரவிசங்கர், அங்கு ஷிமோகா மாவட்டத்தில் சலசலத்து ஓடும் துங்கபத்ரா நதிக் கரையில்... 10 நாட்கள் தனிமைத் தவம் இருந்தாராம்.

அப்போது நிஷ்டையில் அவருக்கு "சுதர்சன கிரியா " என்கிற மூச்சுப் பயிற்சியின் சூட்சுமம் தெரிந்ததாம். இதை ஊர்முழுக்க பரப்பிய ரவிசங்கர்... அதே வருடம் இந்த மூச்சுப் பயிற்சியை சொல்லிக் கொடுக்கும் ஆசிரமத்தையும் பெங்களூரில் தொடங்கினார்.

அப்போது பிரபல கர்நாடக சித்தார் இசைக் கலைஞர் ரவிசங்கர் தரப்பு... ரவிசங்கர் என்ற பெயரில் ஆன்மீக ரவிசங்கர் வலம் வருவதை விரும்பவில்லை. இதையறிந்து தன் பெயருக்கு முன்னால் ஸ்ரீஸ்ரீ என்ற எழுத்துக்களைச் சேர்த்துக்கொண்டு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரராய் அவதாரமெடுத்தார்.

சலனமில்லாத மனநிலையையும் ஆரோக்கியத்தையும் நீண்டவாழ்க்கையையும் தரக்கூடியதே எனது சுதர்சனகிரியா என அவர் விளம்பரம் செய்ததோடு... அதன் உரிமையையும் தன் பெயரில் பதிவு செய்துகொண்டார். உலகளவில் ஏராளமான பக்தர்கள் இவர் பக்கம் வந்தனர். அதோடு அரசியல் புள்ளிகள் பலரும் இவரைத் தேடி வர... அவர்களோடு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு... தனது செல்வாக்கை விஸ்தரித்துக்கொண்டார் ரவிசங்கர். அந்த செல்வாக்கும் அவரைப் பல நாடுகளுக்கு பறக்க வைத்தது. கோடிகளை அவரது காலடியில் கொட்டவைத்தது.

ஹைடெக் சாமியாராய் உலக நாடுகளில் வலம்வர ஆரம்பித்த இவருக்கு தலாய் லாமாவோடும் நட்பு உண்டாக... அவருடன் சேர்ந்து " மனித மதிப்புகள் கழகம்'' என்ற அமைப்பைத் தொடங்கினார். பிரச்சினைகளைச் சந்திக்கும் உலக நாடுகளுக்கெல்லாம் பறந்துபோய்... அந் நாட்டு மக்களுக்கு அமைதியான மனப்பயிற்சிகளையும் கொடுக்க ஆரம்பித்தார்.

இப்படி அமெரிக்க இரட்டை கோபுரம் தகர்க்கப்பட்ட போது அங்கே போய் உரை நிகழ்த்தினார். ஈராக்கில் யுத்தம் முடிந்த போது... அங்கும் சென்றார். கடந்த ஆண்டு இலங்கைக்கும் சென்று அங்கு முகாம்களில் அடைத்துவைக்கப்பட்ட ஈழமக்களையும் பார்த்து ஆறுதல் சொன்னார். இப்படியாக உலக நாடுகள் பலவற்றில் ஆசிரமங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ரவிசங்கர் தான்... இப்போது புகார் கொடுத்துள்ளார்.

"நான் காரை நோக்கி வந்தபோது... துப்பாக்கிச் சத்தம் கேட்டது. யாரோ சுடுகிறார்கள் என என் பாதுகாவலர்கள் எச்சரித்த போது... குண்டு என் பக்தர் ஒருவர் மீது பாய்ந் திருந்தது. என்னைக் கொல்வதற்கு தீயசக்தி கள் களமிறங்கி இருக்கிறது. பொலிஸ் சரி யாக விசாரிக்க வில்லை. அவர்களின் விசாரணையில் எனக்குதிருப்திஇல்லை" என்கிறார்ரவிசங்கர்.

" இது ஜெயில்ல இருக்கும் நித்யானந்தாவின் சதிதான்'' என நம்மை அதிரவைத்த ரவிசங்கரின் அந்த ஆன்மீக நண்பர். அதற்கான காரணங்களையும் விவரித்தார். ரவிசங்கரும் நித்யானந்தாவும் தமிழ்நாட்டுக்காரங்கதான். இதில் ரவிசங்கர் சீனியர். நித்தி ஜூனியர். இந்த இரண்டு பேருக்கிடையிலும் ஈகோ மோதல் தொடர்ந்து நடந்துக்கிட்டு இருக்கு.

**நக்கீரன்**

ரவிசங்கர் நிகழ்ச்சிகளை.... நித்தியும் நித்தி நிகழ்ச்சிகளை... ரவிசங்களும் கடுமையா விமர்சிப்பாங்க. ரவிசங்கருக்கு நெருக்கமான பிரபலங்களிடம் அவரை பத்தி தவறான தகவல்களைப் பரப்புவார் நித்யானந்தா. இதேபாணியில் ரவிசங்கரும் நித்தி பத்தி வத்தி வைப்பார்.

ரஞ்சிதா வீடியோ வெளியான போதே இது ரவிசங்கர் ஆட்கள் செய்த வேலையாத்தான் இருக்கும்னு நித்யானந்தா ஆரம்பத்தில் புலம்பினார். அதனால் நித்யானந்தாவின் வெறி பிடித்த சீடர்களில் ஒருத்தர்தான் இந்த வேலையை செய்திருக்கணும் என்கிறார் அழுத்தமாக.

காவல்துறை என்ன சொல்கிறது? கர்நாடக டி.ஜி.பி. அஜய்குமார் சிங்கிடம் நாம் கேட்டபோது சம்பவம் மாலை 6.05 வாக்கில் நடந்திருக்கு. ஆனா ஹரோஹள்ளி ஸ்டேசனுக்கு இரவு 9.15 க்கு தான் தகவலையே கொடுத்திருக்காங்க. ஸ்பாட் விசாரணையில் சில விபரங்கள் கிடைச்சிருக்கு.

32 எம்.எம் பிஸ்டலைத்தான் யூஸ் பண்ணியிருக்காங்க. 700-750 அடியில் இருந்து சுட்டிருக்காங்க. அதிலும் மேலே வானத்தை நோக்கி சுட்டிருக்காங்க. மேல் நோக்கிப் போன புல்லட் செயல் இழந்த நிலையில் கீழே விழும்போது. வினய் என்ற ஒருத்தரின் தொடையில் அது பட்டிருக்கு. அதனால் அவருக்கு இரத்தக் காயம் கூட உண்டாகலை. அதேபோல் சம்பவம் நடந்த போது ரவிசங்கர் அங்கே இல்லை என்பதும் அவர் புறப்பட்ட 5 நிமிடம் கழித்தே சம்பவம் நடந்தது என்பதும் தெரியவந்துள்ளது. அப்படியிருக்க ரவிசங்கர் தனக்கு குறிவைக்கப்பட்டதா ஏன் சொல்றார்னு தெரியலை என்றார் நம்மிடம்.

விசாரணைக் காக்கிகளோ அந்த ஆச்சிரமத்தில் அதிகாரப் போட்டி இருந்ததா தெரியுது. அவங்களில் ஒருத்தர் சுட்டிருக்கலாம்.

அதேபோல் ஆசிரம விழாவில் அன்று ஜார்க்கண்ட் மேற்குவங்க ஆட்கள் நிறைய கலந்துக்கிட்டு இருந்திருக்காங்க. அதனால் மாவோயிஸ்ட்டுகள் அதில் இருந்தாங்களான்னும் சந்தேகிக்கிறோம். விரைவில் இதன் மர்ம முடிச்சு அவிழ்க்கப்படும் என்கிறார்கள்.

# வடக்கு -கிழக்கு மக்களின் உளவியல் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மக்களின் உளவியல் தேவைகள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள் வழங்கப்பட வேண்டுமென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வலியுறுத்தியுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற வலயங்களில் வாழ்ந்த சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் தற்போது பல்வேறு உளவியல் அழுத்தங்களை எதிர்நோக்கி வருவதாக அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் காரணமாக தமது வாழ்க்கையின் பெரும்பகுதியை அச்சத்துடன் கழித்து வந்த சிறுவர்களுக்கான நலத் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர்,

சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான சட்ட திட்டங்களில் திருத்தங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (6)

# கிளி.வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு நிதியுதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியின் தேசிய வைத்திய சாலையின் அபிவிருத்திப் பணிகளுக்காக ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அபிவிருத்தித் திணைக்களம் நிதி உதவி வழங்கியுள்ளது.

இந்த நிதி ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சிறுவர் கல்வி நிதியத்தினூடாக பயன்படுத்தப்படுமென கூறப்படுகிறது.

இந்நிதியின் கீழ் கிளிநொச்சி வைத்திய சாலையின் சத்திரசிகிச்சை நிலையம், பணியாளர்கள் அறை, இரசாயன ஆய்வுகூடம் என்பன அமைக்கப்படவுள்ளதாகவும் அவற்றுக்கு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


அத்துடன் தாய்மார் மற்றும் சிறுவர்களுக்கான பராமரிப்பு நிலையங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. (6-3)

# தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமையை பாதுகாக்கும் சட்டமூலமொன்று உருவாக்கப்படும்

## ஐ.தே.க. தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையை பாதுகாக்கும் சட்டமூலமொன்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.



இது தொடர்பாக, பத்திரிகை களின் செய்தி ஆசிரியர்க ளுடன் நேற்று முன் தினம் நடைபெற்ற சந்திப்பு ஒன்றின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர்களின் தொழில் தர்மத்தை பாதுகாக்கும் நோக்கில், இந்த சட்டமூலம் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.பாராளுமன்ற அமர்வுகளை பிற்பகலில் நடத்துவதற்கு எவ்வித தேவையும் இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியா போன்ற நாடுகளில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பளமின்றி சேவையாற்றி வருவதாகவும் அங்கு பிற்பகலில் அமர்வுகள் நடத்தப்படுவதில் தவறில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# நவீன எண் ஜோதிடம்

3

மனித வாழ்விற்கும் அவர்களது வறுமைக்கும் செல்வத்திற்கும் சொந்தத் தாய் நாட்டில் வாழ முடியாத நிலைமைக்கும் சொந்த மொழிகளையே உரிமையோடு பேசாது மற்றையோர் மொழிகளில் பிழைப்புக்காக அணுகி வாழும் வழிமுறைகளும் அன்றாட வாழ்க்கை வழிமுறைச் சிதறல்களும் கதிரவனில் ஏற்படும் எந்த வெடிப்புகளுக்கும் எப்படி தொடர்பு இருக்கமுடியும்? சிவேஸ்கியின் கணிப்பு உண்மையானது என்றால் மாக்சியம் தவிடு பொடியாகிவிடும்.அதன்பின் புரட்சிகளை, பொருளாதார ஏற்றத்தாழ்வோடு வளர்க்க முரண்பாடுகளோடும் தொடர்புபடுத்த முடியாமல் போய்விடும், புரட்சிகளிற்கு விளக்கம் ஜோதிடம்தான், கொடுக்க வேண்டி வந்துவிடும்.

சிவேஸ்கியரின் கருத்து தவறாது என்று மறுத்து நிரூபிக்க முடியவில்லை. இதுவரை அவரது 700 ஆண்டுகள் பற்றிய கணிப்பு சரியாக இருந்தது. இன்றும் அது வழிநடத்துகின்றது. அவரது கணிப்பு அவற்றிற்கும் கதிரவனிற்குமான தொடர்பு பெரும் பகுதி சரியாக இருக்கின்றது. அதனால் அவரை விஞ்ஞான ரீதியாக அல்லது மெய்ஞ்ஞான ரீதியாக மறுக்கவும் முடியவில்லை எதிர் க்கவும் முடியவில்லை. அதனால் அவரை சைபீரியாவிற்கே அனுப்பிவிட்டார்கள்.அது சுலபமான காரியம் தானே?

ஸ்ரான்லின் இறந்த பிறகு குருசேர்வ் அவரை விடுதலைசெய்தார். அந்த மனிதனின் 50 ஆண்டுகள் சைபீரியா வில் வீணாகின. விடுதலையான பிறகு அவர் 4மாதமோ 6மாதமோ தான் வாழ்ந்திருந்தார். அந்தக் குறுகிய காலகட்டத்தில் தன் கருத்தை நன்றாக நிறுவுவதற்கு அவர் மேலும் பல ஆதாரங்களைத் திரட்டினார். கொள்ளை நோய் பரவுவதற்குக் காரணம் சூரிய கிரகணம் என்று அவர் கூறினார். சூரிய கிரகணத்தன்று எங்கும் எந்த நாட்டிலும் பிளவுகளும் குழப்பங்களும், திரிபு முறுகல் நிலைகளும் ஏற்படுகின்றது. அதற்குக் காரணம் சூரியனின் வெடிப்பு நிலையே என்று கணக்கு வரைந்து வைத்தார்.

குரங்குகள் மரங்களை விட்டு இறங்கி தரைக்கு வந்து கும்பலாய் பாதுகாப்பாய் ஒன்றுகூடி அமர்ந்துவிடுகின்றன. எப்போதும், சேட்டையும் கூச்சலுமாய் பரபரப்பாய் இருக்கும் அவை கிரகண காலத்தில் கடைப்பிடிக்கும் அமைதியைப் போல தியானம் செய்பவர்களும் கடைப்பிடிக்க மாட்டார்கள்.

இங்கேதான் வாசகர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டியது ஒன்று. மனிதன் ஒரு காந்தப் புலன், அதன் இயக்கம். சூரியன் ஒரு காந்த மண்டலம், சூரியன் அதை இழுக்கும் ஒரு காந்தக் கல். இந்த மாற்றங்கள் கதிரவனில் இருந்து வீசப்படும் என்ணற்ற காந்த அணுக்களை அளவு கொள்ளாக் கணக்கில் அள்ளி வீசிக் கொண்டிருக்கின்றது. அந்த நிலையில், அணு காந்தப் புலன்கள் ஒழுங்கு நிலை முறையில் ஒழுங்காக பூமிக்கு கிடைக்காத பகுதிகள் அல்லது மக்கள் அல்லது ஜீவராசிகள் மற்றும் அந்த நிலம், நீர், காற்று, நெருப்பு அத்தனையையுமே திசைமாறி பின்னி ஒரு கோமா நிலையில் இருப்பவரின் மன நிலைபோன்று மேற் குறிப்ட்ட தன்மைகளின் உள் நுழைந்து பிழிந்து விடுகின்றது.

இதையயெல்லாம் சிவேஸ்கி விளக்கினாலும் இது சுமேரியாவில் தான் முதலில் தோன்றியது. பின்னர் பராசேல்சல் என்ற சுவிஸ் மருத்துவர் மேலும் பல உண்மைகளைக் கண்டறிந்து தந்தார். ஈடு இணையற்ற ஓர் உண்மையையும்இவர் வெளிப்படுத்தினார். அந்த உண்மை இன்று இல்லாவிட்டாலும் நாளை மருத்துவ விஞ்ஞானத் துறையையே அந்த விஞ்ஞான ஜோதிடத்தின் தத்துவம் மருத்துவக் கலைத்துறை தத்துவங்களை மாற்றிவிடும்.

ஜோதிடம் ஒரு புறக்கணிக்கப்பட்ட ஒரு விடயமாக இருந்து வருவது மனவருதத்திற்கு உரியது. அதனால்தான் கருத்துகள், அவை தரும் விளக்கங்கள், ஆய்வுகள் மதிப்பு மிக்கதாக இதுவரை மக்களிடத்தில் கருதப் படவில்லை. நவீன மனிதனுக்கு எட்டாத விடயம் மிக புராதனமானது இந்த ஜோதிட விடயம் ஒன்றேதான். அதேசமயம் மிகவும் புறக்கணிக்கப்பட்டதும் அதுவே ஆகும்.

உலக அளவில் 78 சதவீத மக்கள் ஜோதிடத்தை நம்புகின்றார்கள், இவர்கள் பொதுமக்கள், சிந்தனையாளர்களும் அறிவு ஜீவிகளும் மிக எச்சரிக்கையோடு ஜோதிடத்தை கவனித்து வருகின்றார்கள்

. பல் கலைக்கழகங்கள் கடந்த 300 ஆண்டுகளாக ஜோதிடத்திற்கு வாயில் அடைத்துவிட்டன. இனிவரும் காலம் மீண்டும் திறக்கும் என்பதற்கு சந்தேகம் இல்லை. ஜோதிடம் உள்ளே புகும். மீண்டும் அதுதன் பழைய காலம் போல் ஆல விருட்சம் போல் மீண்டும் வளர ஜோதிட விஞ்ஞானங்கள் அத்திவாரம் வகுத்துக் கொண்டே இருக்கும்.ஜோதிடக் கட்டடங்கள் வானளாவ வளர்ந்துகொண்டே வரும்.

எண் ஜோதிட நிபுணர்

**பேராசிரியர் ராஜராயேந்திரன்**

பராசெல்சஸ் ஒன்றைக் கண்டுபிடித்தார். கிரகங்களின் மாறுபாட்டால் ஒரு மனிதனின் உடல்நிலை கெடுகின்றது என்றார். ஒவ் வொருவருடைய பிறந்த ஆண்டுகளும் அவர் புனைந்து கொண்ட பெயர்களிலும் கிரகங்களின் காந்த சக்திகள் உட்புகுந்து கொள்கின்றன.

ஒவ்வொருத்தரின் மாற்றங்களுக்கும் குண வித்தியாசங்களிற்கும் , ஏற்றத் தாழ்வுகளிற்கும் காரணம் அவர் பிறந்த நட்சத்திரத்திற்கும் மற்றவற்றிற்கும் ஏற்படும் மாறுபட்டால்அது திகழ்கின்றது என்றும் சொன்னார். (தொடரும்)

# ஈழத்தமிழர்களை எக்காரணம் கொண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கூடாது

## மலேசியாவில் மாபெரும் கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

மலேசியாவில் உள்ள சிப்பாங் அனைத்து விமானநிலைய முகாமில் வாடிக்கொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள் தங்களை அகதிகளாக ஏற்றுக்கொள்ளும் நாட்டுக்கு அனுப்புங்கள் என்று மலேசிய அரசுக்கு கோரிக்கை வைத்து உலகத் தமிழினத்துக்கும் கோரிக்கை விடுத்தனர்.

அதன்பின் கோரிக்கை நிறைவேற்றப் படாத பட்சத்தில், 30 நாட்களுக்குப் பின்னர் ஈழத்தமிழர்கள் உண்ணாநிலை மேற்கொண்டனர். உண்ணாநிலை 7 நாட்கள் நீடித்தது. இவர்களை விடுவிக்க பல்வேறு அமைப்புகளும் முயற்சி செய்து வந்தனர். மாற்று செயல் அணி கலைவாணர், மலேசிய பிரதமரின் நேர்முகச் செயலாளரிடம் கோரிக்கை வைத்து அந்த கோரிக்கையை மலேசியப் பிரதமர் ஏற்றுக்கொண்டுவிட்டார்.

அதன்பிறகு உண்ணாநிலை கைவிடப் பட்டது. இந் நிலையில் மலேசிய அரசு மீண்டும் மாறிவிடக் கூடாது என்பத[illegible] க, மாற்று செயல் அணி தமிழின தன்மான பாசறை தமிழக தொழிலாளர் நல அமைப்பு ஆகிய அமைப்புகள் ஒன்றுசேர்ந்து 75 ஈழத்தமிழர்களையும் எக்காரணத்தாலும் இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கூடாது. 75 ஈழத்தமிழர்களுக்கும் உடனே அகதிகளுக்கான உரிமை அளித்து அவர்கள் உயிரை காப்பாற்ற வேண்டும் என்று மாபெரும் கையொழுத்து இயக்கம் நடத்தி வருகின்றனர்.

இதில் பல ஆயிரம் தமிழர்கள் கையெழுத்திட்டு ஆதரவு அளித்து வருகின்றனர். இது தொடர்பாக தெரிவித்த கலைவாணர் , முதல் கட்டமாக ஈழத்தமிழர்களின் உயிரை காப்பதற்காக அரசை பலமுறை முயற்சித்தும் இறுதியாக சந்தித்தேன். அவர்கள் எங்களை அகதிகளாக ஏற்றுக்கொள்ளும் நாட்டுக்கு அனுப்புங்கள் என்ற கோரிக்கையை மலேசிய அரசு ஏற்றுக் கொண்டது.

இதில் எங்கள் முயற்சிக்கு முதல் வெற்றி கிடைத்தது. ஆனாலும் மீண்டும் அரசு மாறி விடக்கூடாது. ஈழத்தமிழர்களை நாடு கடத்தி விடக் கூடாது என்பதற்காகவே இந்த மாபெரும் கையெழுத்து வேட்டை நடத்தி வருகிறோம்.

இதில் ஆர்வமுடன் தமிழர்கள் கையெழுத்திட்டு வருகின்றனர். இந்த படிவங்களை மலேசிய பிரதமர் மற்றும் தூதரக அதிகாரிகளிடம் வழங்க இருக்கி றோம். இதில் வெற்றி கிடைக்கும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது என்றார். (6)

# அவுஸ்திரேலியாவிற்கு ஆட்களை கடத்திய குற்றச்சாட்டில் இலங்கையர் கைது

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு ஆட்களை கடத்திய குற்றச்சாட்டின் பேரில் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

25 வயதுடைய குறித்த இலங்கையர் பேர்த் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமான முறையில் ஆட்களை கடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் குறித்த நபர் 29 பேருக்கு சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், சட்டவிரோதமாக ஆட்க ளை கடத்தும் படகில் பணியாற்றியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தை மீளவும் ஆரம்பிக்குமாறு மக்கள் வேண்டுகோள்

(வேலணை)

கிளிநொச்சி திருவையாறு பகுதிக்குரிய ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை மீளவும் புனரமைத்து நடைமுறைப்படுத்தித் தருமாறு திருவையாறு மேற்கு 3ஆம் பகுதியில் மீளக் குடியேறியுள்ள மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அதாவது, கிளிநொச்சி இரணைமடு நீர்த்தேக்கத்தின் பிரதான வாய்க்கால்களில் இருந்து நீர் இறைக்கும் பாரிய இயந்திரங்கள் மூலம் மேட்டுநிலப்பகுதிக்கு பாரிய குழாய்கள் மூலம் அனுப்பப்பட்டு அமைக்கப்பட்டது. சீமெந்து வாய்க்கால்களில் விடப்பட்டு இப் பகுதியில் விவசாய நிலங்களுக்கு நீரானது பாய்ச்சப்பட்டது.

1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழ் நிலை காரணமாக இத்திட்டத்திற்கு இயந் திர வலுவுக்கு வழங்கப்பட்டுவந்த மின்சாரம் தடைப் பட்டமையால், இத் திட்டம் முழுமையாக பாதிக்கப்பட்டு செயலிழந்தது. இத்துடன் நீர் வழிந்தோடும் குழாய்கள் மற்றும் சீமெந்து வாய்க்கால்களும் முழுமையாக பாவனையற்றுசேதமடைந்து போனமையால், இத்திட்டத்தினை நம்பி விவசயாம் செய்து வந்த இப் பகுதி மக்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

இத்திட்டத்தை மீளவும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி வாழ் மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவை வேண்டுகோள் விடுத்தும் நாட்டின் போர் சூழ்நிலை மற்றும் மின் சாரமின்மையை காரணம் காட்டி கடந்த 20 வருடங்களாக இத்திட்டத்தை மீள நடைமுறைப்படுத்த முடியாமல் போனது.

தற்போது ஏற்பட்ட அமைதிச் சூழலில் மீளவும் உடனடியாக இத்திட்டத்தை புனரமைத்து செயற்படுத்தி, தமது எதிர்கால வாழ்வை வளம் பெற வைக்குமாறு இக் கிராமத்து மக்கள் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இனிவரும் காலங்களின்போதும் திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்துக்கு விமோசனம் கிடைக்குமா? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (6-22)

# கணனிப் பயிற்சிநெறி

(வேலணை)


தீவுப்பகுதி தெற்கு வலயக்கல்வி பணிமனைக்குட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் இளைஞர் யுவதிகளுக்கு கணனி மூலவள பயிற்சி நிலையத்தின் மூலம் கணனி பயிற்சி வழங்கும் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக வலயக் கல்வி பணிமனை அறிவித்துள்ளது.

இதற்கமைய இப்பயிற்சியை பெற விரும்பும் இளைஞர், யுவதிகள் தாம் கல்வி கற்ற பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(4-22)

# நெற்பீடைகளும் முகாமைத்துவமும்

10-XIX




கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

**நெல் வயலில் களைகளும் களைதலும்**

எங்களூர் நெல்வயல்களில் காணப்படும் முக்கியமான களைகளைப் பற்றி விரிவாகப் பார்ப்போம். நெற்பயிருடன் போட்டி போடும் களைகளை வரிசைப்படுத்தினால் கோரை, கோழிச்சூடன் , மார்சீலியா பன்னம் , பன்றி நெல் என வரிசை நீண்டு செல்கின்றது. தன்னினமே தனக்குத் தலையிடி என விளித்திருந்த கோரை– நெல்லுக்கு என்றுமே தலையாய தலையிடி தான். இதில் சுவாரசியமான தென்னவென்றால் ஒரு வகை பன்னம் நெல் வயலில் களையாகியிருப்பதுதான்.

**விஞ்ஞான ஆசிரியர்களே! நெல்வயலில் பன்ன வகை களையைக் கண்டீர்களா?**

எங்களூர் வயல்களில் குறிப்பாக சாவகச்சேரி , வலிகாமப் பகுதிகளில் நிறையவே உண்டு.

இப்பூக்காத தாவரத்தை தெரிடோபீற்றாவினுள் அடக்கியிருப்பதால் என்னவோ எங்களூர் நெல்வயலிலும் அடக்கமாகவே இருக்கின்றது.

இந்த பன்ன களையை **மார்சீலியா குவாட்டிரிபோலியேற்றா** (Marselia quadrifoliata) என பெயரிட்டுள்ளனர். மாணவர்களுக்கு உதாரணமாக காட்டி கற்பிக்க சிறந்ததொரு பன்னக் களை இது. குவாட்டிரிபோலியேற்றா என நான்கு இலைகள் சரியாக காற்றாடி உருவில் இருக்கும். அதுவும் சரிசமமாக பிரித்த 1/4 பகுதியாக ஒவ்வொரு இலையும் இருப்பதனால் இந்த காரணப் பெயர். நிலத்தில் வேர் பதித்து நீருக்கு மேல் இலைகளை தலைகாட்டிக் கொண்டிருக்கும்.


இனியொரு தடவை நெல் வயலுக்கு மாணவர்களை அனுபவமூடான கற்றலுக்காக கூட்டிச் செல்லும் போது இப் பன்னக் களைகளையும் அவர்களுக்கு காட்டுங்கள்.


**மாணவர்களே! நெல் வயலிலுள்ள மார்சீலியா எனும் பன்னவகை களையை கற்ற லுக்காக செல்லும் போது காணத் தவறாதீர்கள்.**

மார்சீலியா களையினால் பெரியளவிலான பாதிப்பு நெற்பயிருக்கு இல்லை யென்றாலும் இடத்துக்கான போட்டி உள்ளி முக்கும் ஊட்டச்சத்துக்கான போட்டி என முதன்மைப் பயிருடன் இருக்கவே செய்யும். ஆனால் ஒன்றை இங்கே நினைவில் வைத்தி ருப்பது நல்லது.

முதலிலேயே கூறியபடி தன்னி னமே தனக்குப் போட்டி என்பதுவும் இங்கே பொருந்தும். நெற்பயிர் ஒரு ஒரு வித்திலைத் தாவரமாக இருப்பதுவும் மார் சீலியாகளை தெரிடோ பீற்றா வகையான பன்னத் தாவரமாக இருப்பதுவும் அவற்றுக்கான போட்டி குறைந்து தேவை வேறுபட்டிருக்கும். எதுவாக இருப்பினும் இதனை களை என பெயர் குத்திவிட்டிருக்கிறோம்.

இக்க ளையை களைதலில் அதிக அக்கறை எவ ருமே காட்டுவதில்லை.ஏனெனில் இதனால் பிரச்சினை இன்றுவரை பெரிதாக வராதவரை எனலாம். (தொடரும்)






# தோழமைச் செடிகளை கண்டுகொள்வோம்!

ஒன்றுக்கொன்று ஒவ்வாத தாவரங்கள் இருப்பதுபோல, தோழமைத் தாவரங்களும் பல உண்டு.அவற்றைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்றால், நாள் முழுவதும் நிலத்தில் இறங்கிப் பணிபுரிய வேண்டும் அப்போதுதான் செடிகளைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தத் தோழமைத் தாவரங்களில் ஒரு தாவரம் மற்றொன்றுக்கு பல வகைகளில் உதவியாக இருக்கிறது. கிராமங்களில் பார்க்கலாம், முருங்கை நடும்போது,கூடவே ஒரு சோற்றுக் கற்றாளையையும் நடுவார்கள். இது எதற்காக? சோற்றுக் கற்றாளைக்கு கறையானைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இருக்கிறது. முருங்கைக்கு மட்டுமல்ல எந்த மரக்கன்றை நடுகை செய்யும் போதும் சோற்றுக் கற்றாளையைக் கூடவே நட்டு வைக்கலாம்.

தண்ணீர் இறைப்பதற்கான வசதிகளற்ற இடங்களில் தென்னை நடும்போது இருபுறமும் இரு வாழைகளையும் சேர்த்து நடுகை செய்யவேண்டும்.

‘‘இங்கு இருக்கும் தண்ணீர் தென்னைக்கே போதாது.இந்நிலையில் வாழை வேறா?’’ என்று கேட்பீர்கள்.

காரணம் தண்ணீர்ப் பிரச்சினை என்றால் வாழை தன் தண்டில்சேர்த்து வைத்திருக்கும் நீரை, கோடை காலத்தில் தென்னைக்கும் கொடுக்கும் என்பதால் இவை தான் தோழமை தாவரங்கள்.


வீட்டுத் தோட்டம் செய்யும்போது ஒரேகுழியில் அவரை, புடலை இரண்டையும் விதைப்பது வழக்கம். புடலை விரைவாக வளர்ந்துவிடும். அவரை மெதுவாக வளரும். இங்கு குறுகிய காலப் பயிரும் நீண்டகாலப் பயிரும் கலந்துள்ளதால் இவைகளுக்கு இடையில் போட்டியில்லை.

வெண்டி பயிரிடும்போது இரண்டு வெண்டிச் செடிகளுக்கு இடையில் கொத்தவரையை விதைப்பார்கள். கொத்தவரை நைட்ரஜனை உள்வாங்கும் தன்மை உடையது. இவை இரண்டும் உட்கொள்ளும் கனிமங்கள் வேறுபடுவதால் இவைகளுக்கு இடையில் போட்டியில்லை.

பயிர்செய் நிலங்களில் நமது முன்னோர்கள் ஒரு பாகத்துக்கு ஒரு வரிசை துவரை விதைப்பார்கள். இரண்டு துவரை வரிசைக்கு இடையில் பச்சைப்பயறு , உளுந்து , எள்ளு , கச்சான் ஆகியவற்றைக் கலந்து விதைத்தார்கள். முதல் மூன்று மாதத்தில் துவரைச் செடியில் வளர்ச்சி மிகவும் மெதுவாக இருக்கும். மூன்று மாதத்துக்குப் பின்பு துவரை விரைவாக இலைக் குடையை வளர்த்து சூரிய ஒளி முழுவதையும் பயன்படுத்திக் கொள்ளும். இங்கு வளர்ச்சிப் பண்பு கணக்கில் கொள்ளப் படுகிறது.

தோழமைச் செடிகளில் துவரை , ஆமணக்கு போன்றவற்றை ‘பம்ப் செடிகள் என்று அழைக்கிறார்கள். இவை ஆழமான வேர் ஒன்றை மண்ணுக்குள் இறக்கி நீரை மேலேற்றுகின்றன. அப்பொழுது பக்கத்தில் உள்ள செடிகளுக்கும் ஈரம் கிடைக்கிறது.

இப்படி ஆயிரமாயிரம் விடயங்களை அள்ளிக் கொடுத்திருக்கிறது இயற்கை.



அதையெல்லாம் நாம் பயன்படுத்தி பலன் பெற வேண்டுமென்றால்... முயற்சி அவசியம். வயல் சோதனையில் இறங்கி இது போன்ற தோழமைச் செடிகளை அடையாளம் கண்டு வைத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு விவசாயிகளின் கடமையாகும்

## வியாதிக்கு விருந்து வைத்த கதை


இரசாயனப் பூச்சி கொல்லியைப் பயன்படுத்துவதனால் மண்ணில் மட்டுமல்லாமல் மனிதர்களுக்கும் அதிக பாதிப்பு இருக்கு. இரசாயனத்தைக் கொட்டி விளைய வைக்கிறதைச் சாப்பிடுகிறவர்களுக்கு மட்டும் பாதிப்பில்லை. அதைவிட அதிகமான பாதிப்பு, அதைப் பயிர்களுக்கு தெளிக்கிற விவசாயிக்குத் தான்.

பக்கத்தில் இருக்கிற படத்தைப் பார்த்தாலே இது உங்களுக்குப் புரியும். பயிர்களுக்கு பூச்சி கொல்லி தெளிக்கும் கையில் உறை போட வேண்டும்.வாய், மூக்குப் பகுதியை மறைத்து துணியினால் கட்ட வேண்டும்.

இது போன்ற முன்னெச்சரிக்கையை நம்மவர்கள் சரியாக கடைப்பிடிப்பதில்லை. இதனால் தெளிக்கும் விடயத்தில் பாதி பயிருக்கும் மீதி மனித உடம்புக்கும் செல்கிறது.

அதேபோல,பூச்சிகொல்லி தெளிக்கும் போது புகைபிடிப்பது, வெற்றிலை போடுவது மாதிரியான செயல்களைச் செய்யவே கூடாது. வியாதிக்கு விருந்து வைக்கும் மாதிரியாகி விடும்.பூச்சி கொல்லியை தண்ணீரில் கொட்டி வெறும் கையால் கலக்கும் போது அந்தக் கையைச் சுத்தம் செய்யாமல் சாப்பிடக் கூடாது. இவ்வாறு நாம் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களில் கவனமாக இருக்க வேண்டும்.

### பூச்சிக்கொல்லி தெளிப்பவருக்கு ஏற்படும் தீமைகள்...



# பங்களாதேஷில் அடுக்குமாடிக் கட்டடங்களில் பயங்கர தீவிபத்து; 108 பேர் உடல் கருகிப்பலி

(டாக்கா)

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நசீர்பஜார் பகுதியில் நேற்று முன்தினம் இரவு திருமண விழா நடந்தது.

3 மாடிக்கட்டிடத்தின் மொட்டை மாடியில் பந்தல் அமைத்து திருமணவிழா நடந்து கொண்டிருந்தது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அந்த திருமண விருந்தில் பங்கேற்றிருந்தனர்.

கட்டடத்தின் தரைத்தளம் பகுதியில் திருமண விருந்துக்கான உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டது. அப்போது அந்த கட்டடத்தின் மிக அருகில் இருந்த டிரான்ஸ்போர்மர் ஒன்று பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறியது.

அதில் இருந்து தீப்பொறிகள் சிதறி நாலாபுறமும் விழுந்தன. திருமண விருந்துக்காக தயாராகி வந்த சமையல் அறை பகுதியிலும் தீப்பொறி விழுந்தது. இதனால் கண் இமைக்கும் நேரத்திற்குள் பரவியது.

கீழ் தளத்தில் பேக்கரி ஒன்றும் எண்ணெய் சேமிப்பு கிடங்கும் இருந்தது. இவற்றுக்கும் தீ பரவியதால் ஒட்டு மொத்த கட்டடத்திலும் தீ சூழ்ந்து கொண்டது.

இரசாயன பிளாஸ்டிக் பொருட்கள் வெடித்து சிதறின படிக்கட்டுக்கள் வழியாக அடுத்தடுத்த மாடிக்கும் தீ பரவியது.

இதற்கிடையே தீப்பிடித்த கட்டடத்தின் கீழ்த்தள கடைகள் மற்றும் வீடுகளில் இருந்த சமையல் காஸ் சிலிண்டர்கள் வெடித்து சிதறின. இதனால் சில நிமிடங்களிலேயே தீ கட்டுப்படுத்த முடியாத படி எரிந்தது.



திருமண விழாவுக்காக வந்திருந்த நூற்றுக்கணக்கானவர்கள் 3 ஆவது மாடி மேல் தளத்தில் சிக்கிக் கொண்டனர். மாடிப்படிகளில் தீ பிடித்திருந்தால் அவர்களால் எங்கும் தப்பி ஓடமுடியவில்லை. *காப்பாற்றுங்கள்* என்று அவர்கள் அபயக் குரலில் கத்தினார்கள்.

தீ விபத்து தகவல் அறிந்ததும் டாக்கா நகரின் பல்வேறு இடங்களில் இருந்து தீயணைப்புப் படைவீரர்கள் பழைய டாக்காவில் உள்ள நஜீர்பஜார் பகுதிக்கு விரைந்தனர்.



தீ பிடித்த கட்டடம் மிக மிக குறுகலான சந்துக் குள் இருந்ததால்தீயணைப்பு வண்டிகள் உள்ளே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இருந்தும் தீயில் சிக்கிக் கொண்டவர்களை மீட்க தீயணைப்புப்படையினர் மிகவும் கடுமை யாக போராடினார் கள்.

இதற்கிடையே 3 மாடி கட்டடத்தில் பிடித்ததீ அருகில் உள்ள வீடுகளுக் கும் பரவி யது. 7 வீடுகள் முழுமையாக தீப்பிடித்து எரிந்தது. தீயணைப்புப் படை வீரர்கள் குறுக லான சந்துக்களுக்குள் புகுந்து சிலரை மட்டுமே காப் பாற்ற கூடிய தாக இருந்தது.

தீ பிடித்த கட்டடங்கள் அனைத்தும் மிக மிக பழமையான கட்டடங்களாகும் மின் வயர் இணைப்புகள் அனைத்தும் 50 ஆண்டுகளுக்கு பழமை வாய்ந்தவையாகும். எனவே தீ மிக வேகமாக அடுத்தடுத்த கட்டடங்களுக்குள் பரவி விட்டது.

இந்த கோர தீ விபத்தில் 108 பேர் பலியாகி விட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் திருமண விழாவுக்கு வந்தவர்ளாவர். பலியானவர்களில் 40 சதவீதம் பேரின் உடல் கரிக்கட்டையாக கருகிக் கிடந்தது.

தீ புகையில் சிக்கி ஏராளமானவர்கள் மயங்கி கிடந்தனர். தீ பிடித்ததில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார்கள். அவர்கள் அனைவரும் டாக்கா நகர மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்பது தெரியவருகிறது. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

திருமண விழாவுக்காக தன்னை அலங்கரித்துக் கொள்ள மணப்பெண் அருகில் உள்ள ஒரு அழகு நிலையத்திற்கு சென்றிருந்தார். இதனால் அவரும் அவரது தோழிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள்.

இரவு நேரம் என்பதால் தீயை அணைப்பதில் கடும் சிரமம் ஏற்பட்டது. சுமார் 3 1/2 மணி நேரத்துக்குப் பின்பு தீ முழுமையாக அணைக்கப்பட்டது. அதன் பின் மீட்புப் பணி தொடங்கியது. 3 மாடி கட்டடத்தின் உள்ளே எல்லா அறைகளிலும் இறந்த உடல்கள் கிடந்தன. இந்த கோர சம்பவம் பங்களாதேஷ் மக்களை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கி கவலையை ஏற்படுத்தியுள்ளது. (6)

# நான் மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவானவள்; என்னைக் கைது செய்தாலும் கவலையில்லை

## எழுத்தாளர் அருந்ததிராய் தெரிவிப்பு



(மும்பாய்)

மாவோயிஸ்டுகளை ஆதரிப்பதற்காக என்னை கைது செய்தாலும் கவலை இல்லை என்று எழுத்தாளர் அருந்ததிராய் கூறினார்.

பிரபல ஆங்கில எழுத்தாளரான அருந்ததிராய் (வயது 48). இவர் பிரசித்தி பெற்ற புக்கர் பரிசு பெற்றவர். சர்ச்சைகளுக்கும் பெயர் பெற்றவர். இந்தியாவிலிருந்து காஷ் மீரை பிரித்து கொடுக்க வேண்டும் என்றும் குரல் கொடுத்து காங்கிரசிடமிருந்தும் பாரதீய ஜனதாவிடமிருந்தும் ஒரே நேரத்தில் வாங்கிக் கட்டிகொண்டவர்.

இப்போது மறுபடியும் ஒரு சர்ச்சைக்குரிய கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். இம் முறை அவர் குரல் கொடுத்திருப்பது அவ்வப்போது மனித வேட்டை தாக்குதல் நடத்தி வரும் மாவோயிஸ்டு தீவிரவாதிகளுக்காத்தான்.

மும்பையில் ஜனநாயகத்தை காக்கும் உரிமைக்குழுவின் ஏற்பாட்டில் நடந்த நிகழ்ச்சியில் மக்கள் மீதான யுத்தம் என்ற தலைப்பில் அருந்ததிராய் ஆற்றிய உரையின் போது கூறியதாவது,

தற்போதைய சூழலில் காந்தீயக் [illegible]கைகள் வெற்றி பெறுவதில்லை. எ[illegible]வே தான் நக்சலைட்டுகள் ஆயுதம் ஏந்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். அதே நேரத்தில் நான் வன்முறையை ஆதரிப்பவள் அல்ல. அதே போன்றுதான் அரசியல் ஆய்வு அடிப்படையிலான கடுமையான கொடுஞ் செயல்களுக்கு முழுமையாக எதிரானவள்.

நக்சலைட்டுகள் நடத்திவரும் போராட்டம் ஒரு போராட்டத்துக்கு ஆதரவு தேவை. ஆனால் இங்கே அது இல்லை. இந்த வழியிலான போராட்டத்தை கையில் எடுப்பதற்கு முன் அவர்கள் வெகுவாக விவாதித்திருக்கிறார்கள்.

நான் அவர்களுக்கு ஆதரவானனவள். இதற்காக நான் கவலைப்படவில்லை. என்னை வேண்டுமானால் பிடித்து சிறையில் தள்ளுங்கள். கனிமங்கள் தண்ணீர் காடுகள் போன்ற இயற்கை வளத்தினை அடைவதில் பழங்குடியினருக்கும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் இடையே நடைபெறுகின்ற யுத்தின் தொடர் விளைவுதான் நக்சலைட்டுகளின் வன்முறை.

99 சதவீத மாவோயிஸ்டுகள்-பழங்குடியினர் ஆவார்கள். அதே நேரத்தில் 99 சதவீத பழங்குடியினர்-மாவேயிஸ்டுகள் அல்ல. இவ்வாறு அவர் கூறினார். (6)

# பாலஸ்தீனத்தின் காஸா பகுதியில் எட்டு துருக்கியர்கள் சுட்டுக்கொலை

(அங்காரா)

பாலஸ்தீனத்தின் காஸா பகுதியில் 8 துருக்கியர்களும் ஒரு அமெரிக்கரும் இஸ்ரேல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இது குறித்து தெரிவருவதாவது,

உதவி கப்பல் ஒன்றில் இவர்கள் காஸா கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்தனர். அப்போது அப்பகுதியில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் அவர்களைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

எனினும் அந்தக் கப்பலில் வந்தவர்கள் தான் தங்களை முதலில் தாக்கினர் என்றும் அதற்குப் பதிலடி கொடுக்கப்பட்டது என்றும் இஸ்ரேல் கூறியுள்ளது.

கப்பலில் புகுந்து அவர்களை மிக அருகில் இருந்து துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளனர் என்று தடயவியல் சோதனையில் தெரியவந்துள்ளது. துருக்கி முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் நாடு என்பது குறிப்பிடத்தக்கது. (6)




# பன்றிக் காய்ச்சல் நோய் முழுமையாக ஒழிக்கப்படவில்லை-உலக சுகாதார நிறுவனம்

(ஜெனீவா)

கடந்த ஆண்டு அமெரிக்கா மற்றும் மெக்சிகோ நாடுகளில் இருந்து எச்1என்1 வைரஸ்கள் மூலம் உலகம் முழுவதும் பன்றிக் காய்ச்சல் நோய் பரவியது. இந்த நோய்க்கு ஆயிரக்கணக்கானோர் இறந்ததால் அது ஒரு "பேரழிவு நோய்" என உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது.

நோய்த்தடுப்பு நடவடிக்கை தீவிரமாக நடைபெற்றும் பன்றிக்காய்ச்சல் நோய் முற்றிலும் ஒழியவில்லை. இன்னும் ஆங்காங்கே இந்த நோய் பரவி வருகிறது என்று உலக சுகாதார நிறுவனத்தின் இயக்குநர் ஜெனரல் மார்க்கரரெட் சான் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் அவசர குழு கூட்டம் சமீபத்தில் நடந்தது. அதில் 15 வெளியுறவு ஆலோசகர் கலந்து கொண்டனர். அப்போது வெளியிடப்பட்ட அறிக்கையின்படி பன்றிக் காய்ச்சல் முழுமையாக ஒழிக்கப்படவில்லை என தெரியவந்ததுள்ளது. (6)

# ஜப்பானின் புதிய பிரதமராக நவோடோ கான் நியமனம்

(டோக்கியோ)

ஜப்பானின் புதிய பிரதமராக ஜனநாயக கட்சியின் உறுப்பினரும் நிதிஅமைச்சருமான நவோடோ கான் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் பிரதமரான யுக்கியோ ஹட்டோயாமா தனது பதவியை இராஜினாமா செய்ததை அடுத்தே இந்த வெற்றிடத்துக்கு கான் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அந்நாட்டு நாடாளுமன்றம் அறிவித்துள்ளது.

ஒக்கினாவாவிலுள்ள அமெரிக்க இராணுவத் தளத்தை அகற்றுவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியதன் காரணமாகவே, முன்னாள் பிரதமரான யுக்கியோ ஹட்டோயாமா தனது பதவியை கடந்த புதன் கிழமை இராஜினாமா செய்திருந்தார்.




8 மாதங்கள் மாத்திரமே பதவியை வகித்த ஹட்டோயாமாவுக்கு எதிர்வரும் ஜூலை மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள தேர்தல்களில் ஜப்பான் ஜனநாயகக் கட்சிக்குள் அதிகளவு ஆதரவு கிடைக்க வில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது. (6)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

Applications will be received by me up to 25th June 2010 from suitably qualified candidates for the following posts.

**(1) Full time Sub-Warden Grade -II (Male)- UMN 3 (III)**

**Qualifications**: A Graduate of recongnized University.

i) Preference will be given to those with experience in administration and Managementof hostels.
ii) Preference will be given to those who have experience in handling the matters related to student's welfare and discipline.

**Note**: The successful applicant should reside in the hostel of the University. However, his family will not be provided with accommodation by this University.

The successful candidate should pay refundable security deposit of Rs.10,000/- .This amount shall be deducted from his salary in 10 instalments.

Salary Scale: Rs. 21,475 - 10X290; 1X420-24,795/-

Selection: By test and Interview

**(2) AUDIO VISUAL TECHNICAL OFFICER,GRADE -II : U -MN4 (II)**

**Qualifications**:

a) Diploma in Technology of the Open University or Special Engineering Apprenticeship Certificate issued from 1975 or Nationl Diploma for Engineering technicians issued from 1989 by the National Apprenticeship Board or National Diploma in Technology or city and Guilds Final Certificate in the fields of Electornics or Power, together with one year's experience in relevant video work.

OR

b) Diploma in Educational Technology or Diploma in Audio Visual Techniques of a recognized polytechnic or University provided that the courses for the Diploma in Educational Technology or the Diploma in Audio Visual Techniques are of two years duration, with 01 year experience in relevant video work.

OR

c) Pass in 03 subjects at the G.C.E.(A/L) examination in Science in one sitting and o6 year experience in Audio Visual work.

Salary Scale: Rs. 21,475 - 10X290; 1X420-24,795 p.m

Selection: By Interview

**(3) ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION)**

**Qualifications**:

L.L.B Degree of a recognized University / Attorney -at - Law with not less than 03 years experience in court work, Legal Work relating to Corporations / Companies and in drafting legal documents.

Salary Scale: 25,145 - 3X585 - 26,900(EB) p.m
28,655 -29X585 - 45,620 p.m

Selection: By Structured Interview

**(4) GRADUATE TRANSLATOR, GRADE II**

**Qualifications**:

1) A degree of a recognized University with Sinhala/ Tamil as a subject.

AND

A credit pass in English Language or Literature at the G.C.E. (Ordinary Level) Examination or should have passed the G.C.E (Advance Level) or higher examination in the English medium.

**Note**: Preference will be given to gradates who have offered English as a subject for the degree and / or who are proficient in all three Languages.

Salary Scale: 19,095 - 6/185; 4X245; 18X290;8X325 -29,005 p.m

Selection: By Interview

**(5) PUBLIC HEALTH NURSE**

**Qualifications**:

a). Certificate of competense as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 12 years experience as a Nurse of which 8 years should be either in Student Health Service or Public Health Service in a recognized Institution.

OR

b) Certificate of competense as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 10 years experience as a Nurse and possessing post primary qualifications in any aspects or nursing.

Salary Scale: 17,960 - 14X185- 20,550/- p.m

Selection: By Aptitude Test and Interview

**Note**:

1. Applications from retired officers will be considered for re - employment for the post of Public Health Nurse.
2. AGE LIMIT FOR ALL POST :- Not more than 45 years.
3. In addition to the above Salary scales, the allowances approved by the University Grands Commission will also be paid.

**STATUTORY BENEFITS**

01. Membership in Universities Provident found and Pension Scheme in the University system
02. Gratuity Payments
03. Employment Trust Fund benefits
04. Free medical service

Applications forms may be obtained from the office of the Senior Assitant Registrar /Establishments (Non -Academic) of this University on a payment of Rs. 100/- for each application from at the People's Bank. University of Jaffna Branch or at the Shroff's Counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna, together with a self -addressed Rs. 5.00 stamped envelope of 23X10c.m, in size.

The envelope containing duly filled application form must bear the name of the post to which they apply on its top left hand horner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 24th June,2010. only applications sent on the specified forms issued by the University will be accepted.

Applications from Government Departments/State Corporations and Statutory Bodies should apply through their appointing authority.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

separate applications should be made for different posts.

**Registrar**
**June 04th 2010.**

(C-368)

## சீனாவின் துணைப் பிரதமர் இலங்கை வரவுள்ளார்

சீனாவின் துணைப் பிரதமர் சென் டெஜயென் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் தகவல்படி அவர் எதிர்வரும் 10 ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக தெரியவருகிறது.

அவருடன் மேலும் 30 பேர் கொண்ட பிரதிநிதிகள் குழுவும் வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இலங்கையில் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில் தங்கியிருப்பர் எனவும் இந்த நாட்களில் சீன துணைப்பிரதமர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

## நிலாவெளி பிரதேசத்தில் 2 முஸ்லிம் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

இலங்கை கடற்படையின் கிழக்கு மாகாண கட்டளைத் தலைமையகத்தின் புலனாய்வுப் பிரிவின் குழுவொன்று திருகோணமலை நிலாவெளி வேலூர் பிரதேசத்தில் இரண்டு முஸ்லிம் இளைஞர்களை கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட் கிழமை கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்களிடம் இருந்து 51 ஜெலக்னைட் குச்சிகள் மற்றும் 200 டெட்டநேட்டர்களையும் கைப்பற்றியதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த இளைஞர்கள் பயணித்த மோட்டார்சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். குறித்த இளைஞர்கள் கிண்ணியா அண்ணல் நகரைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. (6)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த வண்ணார்பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசியும் மற்றும் பெண் நாய்களுக்கான கருத்தடை ஊசியும் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை நீராவியடி சைவ பரிபாலன சபையிலும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரை கஸ்தூரியார் வீதி ஆரோக்கிய மாதா கோவிலடியிலும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை கனகசபை வீதியிலும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கையிலும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கை, பிற்பகல் 2 மணி முத்ல் 4 மணி வரை அன்னை சத்திரலேன் நாவலர் வீதியிலும் வைத்து வழங்கப்படவுள்ளதாக யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (6-3)

## கரப்பந்தாட்ட போட்டி

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்ப மாகவுள்ளது.

இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் பிரதேச செயலக அணிகள் உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (6-24)

முடியுமென்று நம்பினால் முடியும்
~ இத்தாலி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பாதாளக் கிணற்றில் சாதனை படுபாதாளத்தில் தமிழர்

இந்த நாட்டின் மன்னனாக இருந்த துட்டகைமுனு சிறுவனாக இருந்தபோது கால்களை மடக்கி சுருண்டவாறு கிடக்கின்றான்.

தாய் விகாரமாதேவி துட்டகைமுனுவிடம் எதற்காக இப்படியென்று கேட்கின்றாள். அதற்கு தெற்கே மகாவலி, வடக்கே தமிழர் எப்படிக் கால்களை நீட்டி நிம்மதியாகக் கிடக்க முடியும் என்று பதில் தருகிறான்.

துட்டகைமுனுவின் இந்தப் பதிலில் இருக்கக் கூடிய நியாயப்பாடுகள் பற்றி எதுவும் விவாதிக்க நாம்முற்பட வில்லை.

அதேநேரம் துட்டகைமுனு எல்லாள மன்னனுடன் போரிட்டது பற்றியோ தனது உடன் பிறந்த சகோதரன் முகலாயனைத் துரத்தி விட்டது பற்றியோ நாம் இங்கு பிரஸ்தாபிக்கப் போவதும் இல்லை.

மாறாக தமிழ்மக்களின் இன்றைய நிலை பற்றியே நாம் நோக்குதல் வேண்டும்.

தமிழர் பிரதேசம் முழுவதும் படையினர் வசமுள்ளது. காவலரண்கள், மிகப் பெரும் இராணுவ முகாம்கள், வீதிக் காவல் எனப் பலவாறாக இராணுவம் தமிழ் மக்களின் இருப்பிடங்களைச் சூழ ஆயுதம் ஏந்திய வண்ணம் காத்திருக்கின்றது.

துப்பாக்கிகளை ஏந்திய படையினரின் காத்திருப்பு எதற்கானது என்று கேட்டால், ஏதேனும் அசமாத்தம் தெரிந்தால் உடனடியாகத் தங்கள் துப்பாக்கிகளுக்கு வேலை கொடுப்பதற்காக என்பது பதிலாக அமையும். எனவே தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் ஆயுத முனைகளின் பார்வையில் நடமாடிக் கொண்டிருக்கின்றனர்.

இருந்தும் இந்த நிலை தெரியாமல் பலர் இருப்பது அபத்தம்.

சிறுவனாக இருந்த துட்டகைமுனு உணர்ந்ததைத் தமிழர்களில் பெரியவர்கள் உணரவில்லை என்பதே வேதனை.

களியாட்டங்கள், காட்சிகள் இதையே இன்பமெனக் கருதிக் காலம் கடத்தும் தமிழ் இனத்தின் எதிர்காலம் என்ன?

இன்னமும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் எண்ணம் ஆட்சியாளர்களிடம் ஏற்படவில்லை.

மாறாகக் குடியேற்றம், புத்தபிரானை பிரதிஷ்டை செய்யும் பணி, தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் வன்னியில் வர்த்தக நிலையங்களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் இவை யே நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் எதுவும் உணராதவர்களாக, எதுவும் தெரியாதவர்களாக பாதாளக் கிணற்றைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் இனத்தின் வாழ்க்கை, பாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருக்கும் போது, பாதாளக் கிணற்றைப் பார்க்கும் பரிதாபம்.

நாம் என்ன செய்ய முடியும் என்று கேட்பது நியாயமில்லை. என்ன செய்யலாமென்று சிந்திப்போம். அந்தச் சிந்தனையில் இறைவனின் கருணைத் துளிகள் கலந்து மிகப் பெரும் சாதனையைப் படைக்கும். ஆகையால் எங்கள் எதிர்காலம் ஒளிர்க் கூடிய ஆராய்வோம். பேதங்களை மறந்து ஒரு பாதையில் பயணத்தைத் தொடருவோம். வாருங்கள்.

# கிறிஸ்மஸ் தீவிலுள்ள இலங்கையர் உள்ளிட்ட 750 அகதிகள் இடமாற்றப்படவுள்ளனர்

## அவுஸ்.குடிவரவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிலுள்ள இலங்கையர் உள்ளிட்ட சுமார் 750 அகதிகள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு அரசியல் அந்தஸ்து வழங்கப்படமாட்டாது என அவுஸ்திரேலிய பிரதமர் அறிவித்து சில வாரங்களின் பின்னர் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த அறிவித்தலை அடுத்து கிறிஸ்மஸ் தீவில் நிர்க்கதியான நிலையிலுள்ள இலங்கையைச் சேர்ந்த 150 பேரும் 600 ஆப்கானிஸ்தானியர்களுமே தற்போது மாற்றப்படவுள்ளனர்.

இடமாற்றம் செய்யப்படுகின்ற அவர்கள் மேற்கு அவுஸ்திரேலியாவிலுள்ள மாற்று முகாமில் தங்க வைக்கப்படவுள்ளதாக குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ் இவன்ஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேசுநலன் மற்றும் பாதுகாப்பு அடிப்படையில் இவர்கள் தனித்து வைக்கப்பட வேண்டுமா அல்லது ஒன்றாக வைக்கப்படுவார்களா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இடமாற்றம் இதுவரை காலமும் மேற்கொள்ளப் படாததை காட்டிலும் இது பாரிய அகதிகள் இடமாற்றமாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

# தென்னிந்தியாவில் எத்தகைய எதிர்ப்பானாலும் இந்திய மத்திய அரசு எமக்கு சாதகமாகவே செயற்படுகிறது

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய சர்வதேச திரைப்படவிழாவில் (IIFA) அமிதாப் பச்சன் உட்பட முக்கிய நடிகர்கள் கலந்து கொள்ளாததன் காரணமாக தென்னிந்தியத் திரைப்படங்களை இலங்கையில் திரையிடுவதை தடைசெய்ய வேண்டிய அவசியமில்லையெனத் தெரிவிக்கும் அரசாங்கம், சர்வதேச ரீதியில் புலம்பெயர் புலி ஆதரவாளர்களின் தூண்டுதலின் பேரிலேயே தென்னிந்தியாவில் எதிர்ப்பு ஏற்பட்டது எனவும் இதனை பெரிதுபடுத்த வேண்டிய அவசியமில்லையென்றும் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார். அமைச்சர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தென்னிந்தியாவில் எமக்கு எதிராக எவ்வாறான எதிர்ப்புகள் எழுந்தாலும் இந்திய மத்திய அரசாங்கம் எமது நாட்டுக்கு சாதகமான ரீதியிலேயே தீர்மானங்களை மேற்கொள்கிறது என்றும் அண்மையில் மேலும் இரண்டு வருடங்களுக்கு விடுதலைப்புலிகள் அமைப்பை தடை செய்யப்பட்ட அமைப்பாக பிரகடனப்படுத்தியமை இதற்கு சிறந்த உதாரணமாகும் என்றும் கூறினார்.

எனவே எந்த ரீதியிலும் அழுத்தங்கள் வந்த போதிலும் ஐபா நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெறுகிறது. இதன் மூலம் புலம்பெயர்ந்தவர்களின் முயற்சி தோல்வி கண்டுள்ளது என்று அவர் கருத்துரைத்தார். (6)

# பாண்டிருப்பில் ஆயுதங்கள் மீட்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாண்டிருப்பு பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நேற்று மதியம் பெருந்தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து அம்பாறைப் பொலிஸ் நிலைய பொலிஸார் காலை முதல் இப் பிரதேசத்தில் சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை நடத்தினர்.

அவர்கள் குறித்த வீட்டு வளவில் உரப்பைக்குள் வைத்து புதைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை கண்டுபிடித்தனர்.

அத்துடன் இந்த ஆயுதங்களை உடைமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் வீட்டு உரிமையாளரான தேவா (வயது 40) என்ற பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டார். (ச-5)

# தனியார்துறை ஊழியர்களுக்கு

## ஓய்வூதியம் வழங்குவதன் சாத்தியம் குறித்து அரசாங்கம் ஆராய்வு

(கொழும்பு)

அரச கூட்டுத்தாபனங்கள், நீதிச்சபைகள் மற்றும் தனியார் துறையில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு ஓய்வுதியத்தை வழங்குவதன் சாத்தியம் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக தொழிலமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக தனியார்துறை தொழிலதிபர்களுடன் பேச்சுக்களை நடத்த தாம் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆலோசனை வழங்கவென முத்தரப்பு ஆலோசனைக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களுக்கும் ஓய்வூதியத்தை வழங்குவது தொடர்பான திட்டமொன்றை ஆரம்பிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (6)

# வந்திட வேண்டும் வண் வடகிழக்கு பதியுறை வீரகத்தி விநாயகரே

வண்.வட கிழக்கு பதியுறை
வல்வினை தீர்த்திடும்
வீரகத்தி விநாயகரே
உம் மலரடி பணிந்து தொழுதோம்
எமை வருத்தும்
தொல்வினை தனை களைந்து
எம்தனை காத்திட வேண்டும்-ஐயா
எம்குல தெய்வம் நீர் இங்கிருக்க
இனி வேறொரு துணை எமக்கு வேண்டுமோ
கொண்ட மௌனம் கலைந்து
இங்கு வந்திட வேண்டும்-ஐயா
எமைக் காத்திட



*து.சுரேந்திரன்*


**வண்.வட கிழக்கு (கலட்டி) வீரகத்தி விநாயகர் கொடியேற்றம் இன்று**

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள் வீர இளைஞருக்கு



உனக்குள் இருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்து. அதைச் சுற்றி ஒவ்வொன்றும் அதற்கு இசைவாக ஒழுங்குபடுத்தப்படும். இறக்கும் வரை பணிசெய். நான் உன்னுடன் உள்ளேன், நான் போனபின், எனது ஆன்மா உன்னுடன் உழைக்கும். இந்த வாழ்வு, வரும் போகும். செல்வமும் புகழும் போகமும் சில நாட்களுக்கே. உலக ஆசையில் மூழ்கிய ஒரு புழுவாக இறந்தாலும் உண்மையை போதித்துக் கொண்டே செயல்களத்தில் உயிரைவிடுவது நல்லது. மிக நல்லது.

திறந்த பாடசாலை செயற்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா மங்கல விளக்கேற்றுவதையும் தேசிய கல்வி நிறுவன பணிப்பாளர் நந்தன் வன்னியாராச்சி மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் உரையாற்றுவதையும் திறந்த பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்களை இணைப்பாளரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலக செய்தியாளர் )

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு வவுனியாவில் பாடசாலை அமைக்க முடிவு

## ஹிந்தி நடிகர் விவேக் ஒபராய் தெரிவிப்பு



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலனுக்காக வவுனியாவில்பாடசாலையொன்றை அமைக்கவுள்ளதாக பிரபல ஹிந்தி திரையுலக நட்சத்திரமான விவேக் ஒபராய் தெரிவித்தார். சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழா நிறைவுபெற்றதும் வவுனியாவுக்குச் சென்று சிறுவர் சிறுமியர்களுக்கான பாடசாலை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக் அவர் கூறினார். நேற்று முன்தினம் காலை கொழும்பு கொள்ளுப்பிட்டி சினமன் க்ரான்ட் ஹோட்டலில் சர்வதேச ஊடகவியலாளர் சந்திப்பிலேயே விவேக் ஒபராய் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காய் தனது தந்தையின் ஒபராய் பவுண்டேஷன் மூலம் உதவக்கிடைத்ததை நினைவு கூர்ந்த அவர் இதனால் தொடர்ந்து தமிழ் நாட்டுக்கும் தனக்கும் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவுக்கு இலங்கை செல்வதை அறிந்த எனக்கு நெருக்கமான அரசியல் தலைவர்கள் மற்றும் திரையுலகத்தினர் என்னை இலங்கை செல்ல வேண்டாம் என்று தடுத்தனர். இலங்கையில் தமிழர்களின் கஷ்டங்கள் தீர்க்கப்பட வேண்டும், சர்வதேச இந்திய திரைப்பட அக்கடமி வழிசெய்ய வேண்டும் என்று என்னை வலியுறுத்தினார்.

அன்றிலிருந்தே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ்ச் சிறார்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் உதயமானது. அதனை சர்வதேச இந்திய திரைப்பட அக்கடமியிடம் சொன்னேன். அவர்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். அதன்படி வவுனியாவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான பாடசாலையொன்றை சர்வதேச இந்திய திரைப்பட அக்கடமி இலங்கை கிரிக்கெட் சபை என்பவற்றின் உதவியோடு நிறுவத் திட்டளமிட்டிருக்கின்றேன்.

இது கல்வி புகட்டும் நிலையமாக மாத்திரம் அல்லாது பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான சுகாதார போஷாக்கு நலனோம்புகை நிலையமாகவும் இருக்கும் என்றும் இது பின்னர் வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட உள்ளதாகவும் கூறினார். (6)

# வடக்கு-கிழக்கில் தென்பகுதி மீனவர்களுக்கு மீன்பிடிக்கத் தடை

## அமைச்சர் ராஜித சேனாரட்ண

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அவ்வப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மாத்திரமே மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடமுடியுமெனக் கடற்றொழில் அமைச்சர் ராஜிதசேனரத்ன தெரிவித்தார்.தென்பகுதி மீனவர்களுக்கு வட கிழக்குப் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி வழங்கப்படமாட்டாதென அமைச்சர் தெரிவித்தார்.

தென்பகுதி மீனவர்களுக்கு இதற்கான அனுமதி வழங்கினால் அநாவசியப் பிரச்சினைகள் உருவாகலாமென அவர் சுட்டிக் காட்டினார்.

வடக்கு-கிழக்கில் கடற்றொழில் துறையை மேம்படுத்துவதற்கான பல திட்டங் கள் முன்னெடுக்கப்படுவதாகவும் இங்கு அப்பகுதியைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மீனவர்களுக்கு மட்டுமே கடற்றொ ழிலுக்கு அனுமதி வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (6)


## நல்லூர் பிரதேச சபை

# திருநெல்வேலி சந்தை புனரமைப்பு வேலைக்கான கூலி அடிப்படையிலான ஒப்பந்தகாரருக்கான கேள்வி அறிவித்தல் -2010

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் இக்ராட்(ICTAD) தரம் M-7(C8) அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தை உடைய பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கேள்வி கோரப்படுகின்றது.கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.


01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 07.06.2010 தொடக்கம் 21.06.2010 பி.ப 3.00 மணி வரை
02. கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி : 22.06.2010 ந.ப 12.00 மணி வரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 22.06.2010 பி.ப 2.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட்(ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட்(ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் இரு பிரதியையும் , 'செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி,கொக்குவில்' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இட வேண்டும்.
08. மேலதிக விபரங்களைஅலுவலக பிரதான நிறைவேற்று அதிகாரி, உருத்திரா பொறியியல் கட்டிடக் கலை மதியுரையகம் , இல 8 நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற் வரி | NBT |
|---|---|---|---|---|---|
| 01 | கடைத் தொகுதிக்கான புதிய மாடிக் கட்டடம் | 50,000.00 | 500.00 | 60.00 | 15.00 |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.

திரு.மே.சாந்தசீலன்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை,
04.06.2010.

(C-372)









யாழ்ப்பாணத்துக்கும் பூநகரிக்கும் இடையிலான கடற் போக்குவரத்துத் தொடர்பாக ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோர் உட்பட்ட குழுவினர் ஆராய்வதையும் சேதமடைந்த நிலையிலுள்ள பூநகரி மகாவித்தியாலயக் கட்டடத்தையும் மேலுள்ள படங்களிலும், பூநகரிப் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டோரை மற்றைய படங்களிலும் காணலாம்.

# மீண்டும் சாதித்த மேற்கு ஜேர்மனி



பத்தாவது உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடர்,

கடந்த 1974 ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனியில் நடைபெற்றது.

மூன்றாவது முறை உலகக் கிண்ணத்தை கைப்பற்றியதன் மூலம் பிரேசில் அணிக்கு ஜீல்ஸ் ரிம்மட் கிண்ணம் சொந்தமானது.

இதனால் புதிய கிண்ணத்தை சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் (பிபா) அறிமுகப்படுத்தியது. இக்கிண்ணத்தை இத்தாலியைச் சேர்ந்த சிற்பி சில்வியோ கஜானினா உருவாக்கினார்.

இந்த உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடரில் பிபா புதிய விதிமுறைகளைக் கொண்டு வந்தது.

இதன்படி முதல் சுற்று, இரண்டாவது சுற்று என அனைத்து போட்டிகளுமே ரவுண்ட் றொபின் முறையில் நடைபெற்றது.

தகுதிச் சுற்றில் மொத்தம் 98 அணிகள் பங்கேற்றன. இதன் முடிபில், முன்னணி அணிகளான ஸ்பெயின், இங்கிலாந்து, கங்கேரி மற்றும் பிரான்ஸ் ஆகிய அணிகள்



வெளியேறின.

முதன் முறையாக கெய்டி, ஜைரே, கிழக்கு ஜேர்மனி மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் தகுதி பெற்றன.

இத்தொடரில் போலந்து, நெதர்லாந்து அணிகள் தங்களது அபார ஆட்டத்தால் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தின.

இதில் 12 அணிகள் மோதிய முதல் சுற்றுப் போட்டிகளின் முடிபில் பிரேசில், நெதர்லாந்து, கிழக்குஜேர்மனி, ஆர்ஜன்ரீனா, மேற்குஜேர்மனி, போலந்து, சுவீடன், யுகோஸ்லாவியா ஆகிய அணிகள் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறின.

### பிரேசில் ஏமாற்றம்

ஜாம்பவான் பீலே இல்லாத பிரேசில் அணி, இம் முறை திணறியது. இரண்டாவது சுற்றின் முடிபில் அதிக புள்ளிகளைப் பெற்ற நெதர்லாந்து, மேற்கு ஜேர்மனி அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

விறுவிறுப்பாக நடந்த இறுதிப் போட்டியில் நெதர்லாந்து அணி முதல் கோல் அடித்து அசத்தியது. பின்னர் சுதாரித்து ஆடிய மேற்கு ஜேர்மனியின் பினரட்னர், முல்லர் தலா ஒரு கோல் அடித்தனர்.

இறுதியில் மேற்கு ஜேர்மனி அணி 2:1 என்ற கணக்கில் நெதர்லாந்து அணியை வீழ்த்தி இரண்டாவது முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதற்கு முன் 1954ஆம் ஆண்டு உலகக் கோப்பையை வென்றிருந்தது.

நடப்பு சம்பியனாகவிருந்த பிரேசில் அணியால் நான்காவது இடத்தையே பெற முடிந்தது.




### துளிகள்

உலகக் கிண்ண கால்பந்தாட்ட வரலாற்றில் சிவப்பு அட்டை (ரெட் கார்ட்) காட்டப்பட்டு முதன் முறையாக வெளியேற்றப்பட்ட வீரர் சிலி அணியைச் சேர்ந்த கார்லஸ் கேஸ் ஜெலி.

1974 ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனி அணிக்கு எதிரான முதல் சுற்று ஆட்டத்தில் முரட்டுத்தனமாக ஆடிய இவர் தண்டனைக்குள்ளானார்.

உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடர்—2010 தென்னாபிரிக்கா
SOUTH AFRICA 2010 FIFA WORLD CUP
இன்னும் 7 நாட்கள்

# புலிகள் இயக்கம் மீதான...

அதேநேரம் பிரித்தானியாவில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான உறவுப் பாலமாக பிரித்தானியா செயற்படும் என்றும் தூதுவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியாவிலுள்ள தமிழர்கள் இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும் அரசியல் வேறுபாடுகளைக் களையவும் முன்வருதல் வேண்டும். இலங்கை அரசுடன் இணைந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த வர்த்தக முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்றார். (ச-5)

# இருதரப்பும் வெளிப்படை...

இடம்பெற்று வருகின்றன என்றும் அமைச்சர்கள் தெரிவித்து வருகின்றமை தொடர்பில் தகவல் வெளியிடுகையிலேயே ரவி கருணாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சு நடத்துமானால் அது ஆரோக்கியமான சிறந்த விடயம் என்றே கருதுகின்றோம். ஆனால், நடத்தப்படுகின்ற பேச்சுக்கள் அர்த்த முள்ளதாக அமைய வேண்டும். பேச்சுக்கள் மூலம் சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொருத்தமான தீர்வு ஒன்றுக்கு அனைத்துத் தரப்பினரும் செல்ல வேண்டும் என்றார். (ச-5)

# அமிதாப்பச்சனை வரவழைக்க அரசாங்கம் பகீரதப் பிரயத்தனம்

(கொழும்பு)

இலங்கையில் நடக்கும் சர்வதேசத் திரைப்பட விழாவை பெரும்பாலான இந்திய நட்சத்திரங்கள் புறக்கணித்துவிட்டதால், விழா களையிழந்துள்ளது. இது இலங்கைக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில் விழாவுக்கு வரமறுத்துவிட்ட அமிதாப்பச்சனை எப்படியாவது வரவழைக்க அரசாங்கம் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

அத்துடன் இந்திய அரசுத் தரப்பிலும் அவரைத் தொடர்பு கொண்டு பேசி வருவதாகக் கூறப்படுகிறது.

இலங்கையில் நடைபெற்ற போரில் மனித உரிமை மீறல் சம்பவங்களை மறைக்கவே, இந்த விழாவை இலங்கை அரசு நடத்துவதாக தமிழ் உணர்வாளர்களும் தென்னிந்தியத் திரைப்படச் சம்மேளனமும் குற்றம்சாட்டிவரும் நிலையில் சல்மான்கான், விவேக் ஓபராய் போன்ற ஒரு சில ஹிந்தி நடிகர்கள் மட்டும் இலங்கைக்கு வந்துள்ளார்கள். கொழும்பு செல்லும் எந்தவொரு நடிகர், நடிகைகளின் படங்களைத் திரையிடமாட்டோம் என்று தென்னிந்திய திரைப்பட சம்மேளனம் அறிவித்திருந்தது.

எனவே விழாவில் ரஜனிகாந்த், அமிதாப்பச்சன், கமல், ஷாருக்கான், அபிஷேக் பச்சன், ஐஸ்வர்யா ராய், மணிரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

3 நாட்கள் நடக்கும் இந்த விழாவில் கடைசி நாளான இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு விருதுகளை வழங்க உள்ளார். ஒரு நாள் மட்டுமாவது அமிதாப்பச்சனை கலந்துகொள்ள வைக்க முயற்சிகள் நடந்து வருவதாக கூறப் படுகிறது. (ச-5)

# இலங்கையுடனான சீன உறவை உடைப்பதற்கு இந்தியா கங்கணம்

## இராஜதந்திர மட்டத்தில் பேச்சு

(கொழும்பு)

இலங்கை மீது சீனா செலுத்தி வரும் ஆதிக்கத்தை உடைப்பதற்கு இந்தியா கங்கணம் கட்டி உடனடியாக செயலில் இறங்கி உள்ளது என்று இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சீனா இலங்கையின் இராணுவ, பொருளாதார, அரசியல் விவகாரங்களில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. சீனா அளவுக்கு இலங்கை விவகாரங்களில் இந்தியாவால் ஈடுபட முடியாமல் போய்விட்டது.

இந் நிலையிலேயே இலங்கை விவகாரங்களில் காத்திரமான வகையில் பங்கெடுப்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் இந்தியா முழு மூச்சாக இறங்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக சீபா என்கிற வர்த்தக உடன்படிக்கையை இந்தியாவுடன் இலங்கை கைச்சாத்திட வேண்டும் என்று பாரதத் தரப்பு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

இந்த உத்தேச உடன்படிக்கையின்படி இந்தியர்கள் கணிசமான அளவில் இலகுவாக இலங்கையில் தொழில் வாய்ப்புக்களைப் பெறமுடியும்.

குறிப்பாக ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள் போன்ற தொழில்சார் நிபுணர்கள் இலங் கையில் வேலை பார்க்க முடியும்.


இதனால் இவர்களின் நலன்களைப் பேணுதல் என்கிற போர்வையிலும் இலங்கையின் விவகாரங்களில் பெரிதும் தலையிட இந்தியாவுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது எனத் தெரிய வருகின்றது. (ச-5)

# அரசியல் அமைப்பு சீர்திருத்தம் டிசம்பர் மாதத்தில் நிறைவுபெறும்!

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் அமைப்பு சீர்திருத்த நடவடிக்கைகள் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நிறைவு பெறும் என ஏசியன் ரிபியூன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த சீர்திருத்தம் மூன்று கட்டங்களாக வெளியிடப்படும் நிலையில், முதலாவது கட்டம் எதிர்வரும் யூலை மாதம் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



அரசியலிலும் இதே அடி....?

அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் இந்த சீர்திருத்தம் முக்கியமாக அமைந்திருக்கும். அத்துடன் முதலாவது கட்டத்தில் 13 ஆவது அரசியல் அமைப்பின்கீழ் அதிகாரப் பகிர்வும் மாகாண சபைகளும் என்ற அம்சமும் காவல்துறை ஆணைக்குழு மற்றும் அரசியல் அமைப்பு ஆணைக்குழு என்பவற்றின் சீர்திருத்தங்களும் உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது கட்டத்தில் செனட் சபை தொடர்பான சீர்திருத்தங்கள் அடங்கியிருக்கும் எனவும் இந்த செனட் பிரதிநிதிகள் சபை இன ரீதியான பிரதிநிதித்துவத்தை கொண்டு இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

மூன்றாவது கட்டத்தில் ஜனாதிபதியின் பதவி தொடர்பான சீர்திருத்தம் உள்ளடங்கியிருக்கும் என ஏசியன் ரிபியூனில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

# கொரியன் அக்குபஞ்சர் சிகிச்சை

(கைதடி)

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் எதிர்வரும் 7,8ஆம் திகதிகளில் கொரியன் அக்குபஞ்சர் சிகிச்சை நடைபெறும்.

இச் சிகிச்சையை பெறவிரும்புவோர் கலந்து கொண்டு பயன்பெறலாம் என வைத்திய அதிகாரி த.ஜெயசங்கர் அறிவித்துள்ளார். (ச-3)

# மாவட்ட டெங்கு தடுப்பு செயலணிக்குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் ஒருங்கிணைக்கும் அங்கு ரார்ப்பண நிகழ்வு இன்று 5ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணிக்கு யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ச)

# கூட்டமைப்பு எம்.பிக்கள்...

கட்டைக்காடு, உடுத்துறை, தாளையடி போன்ற பகுதிகளைச் சேர்ந்த பெருமளவிலான மக்கள் இங்கு உள்ளனர். சுமார் 750 குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 700க்கு மேற்பட்ட மக்கள் இங்கு உள்ளார்கள்.

இம்மக்கள் கடந்த 4 வருடங்களாக தொடர்ச்சியான இடம் பெயர்வினால் தமது முழுமையான சொத்துக்களை இழந்துள்ளனர்.

அத்துடன் இவர்கள் வேறு நலன்புரிக் கிராமங்களிலிருந்து மீள்குடியேற்றம் செய்வதற்காக கொண்டு வரப்பட்டவர்களே இவ்வாறு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இம் மக்களின் பிரதேசம் கண்ணி வெடிய கற்றப்பட்ட பிரதேசமாக கண்ணி வெடியகற்றல் பிரிவினரால் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசும் மீள்குடியேற்றம் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படுவதாகக் கூறுகின்றது ஆனால் மீள்குடியேற்றம் செய்யப்பட வில்லை என்று அம்மக்கள் தெரிவித்தனர் என்று கூறினார். (ச-5)

# மலேசிய அரசியல்வாதி...

என்கின்ற சந்தேகத்தில் அவரைக் கைது செய்ய இந்திய அரசு யோசித்துள்ளது என்று புலனாய்வுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு பொலிசார் அவரைக் கைது செய்ய உசார் நிலையில் உள்ளார்கள் என்று இந்தியாவின் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இராமசாமி அண்மையில் சென்னைக்குச் சென்ற போது புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு திரட்டும் வகையில் உரைகளை நிகழ்த்தினார் என்று தமிழ்நாட்டுப் பொலிசார் தெரிவிக்கின்றனர். (ச)

# ஐ.நா.விசாரணை...

ஹோகண தலைமையிலான விசாரணையாளர்கள் குழு எகிப்து, ஜோர்தான், சிரியா ஆகிய நாடுகளுக்கு இம்மாதம் நேரில் விஜயம் செய்து விசாரணைகளை நடத்தும் என்றும் ஐ.நா. சபை அறிவித்துள்ளது. (ச-5)

# மனித உரிமை...

நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது 30ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்லாம் என குற்றம் சுமத்தப் பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இரண்டு தரப்பினரும் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களை மீறிச் செயற்பட்டுள்ளனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். உள்நாட்டு ரீதியில் நடத்தப்படும் விசாரணைகளின் மூலம் நியாயம் கிட்டியமைக்கான சான்றுகள் கிடையாது.

உள்நாட்டு விசாரணைகளின் மூலம் குற்றச் செயல்களுக்கு தண்டனை கிடைக்கப் பெறாத நிலைமை காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுத் தரப்பினர் மீது பாரிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள நிலையில், சர்வதேச விசாரணைகள் மூலம் அவற்றுக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டார். (ச-5)

# கூட்டமைப்புடன் 7ஆம் திகதி பேச்சு...

அரசாங்கம் அவசர அவசரமாக தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அதற்கான அழைப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நேற்று அனுப்பியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பேச்சுவார்த்தை ஜனாதிபதி இந்திய விஜயத்தை மேற்கொள்ளும் 8ஆம் திகதிக்கு முந்தைய தினமான 7 ஆம் திகதியே நடைபெறும் என்றும் அத்தகவல்கள் கூறுகின்றன.

இப் பேச்சுவார்த்தையில் அரச தரப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட முக்கிய அமைச்சர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்னதாக ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற ஜி 15 நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கைப் பிரச்சினைத் தீர்வு குறித்து வலியுறுத்தி இருந்ததாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அவசிய அவசரத் தீர்வு காணப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டிருந்ததாகவும் அத்தகவல்கள் தெரிவித்திருந்தன.

சர்வதேச ரீதியாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஏற்பட்டு வரும் எதிர்ப்பலைகளைத் தணிப்பதற்கு இத்தகைய முயற்சி ஒன்றின் அவசியம் குறித்து இந்தியத் தரப்பால் இலங்கைக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளதாகவும், அதனடிப்படையிலேயே இந்தியாவுக்குப் புறப்படுவதற்கு முன்னதாக அவசர அவசரமாக இப் பேச்சுவார்த்தை ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இன்னொரு தகவல் கூறுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தை ஒட்டித் தமிழ் நாட்டில் எழுந்து வரும் எதிர்ப்பலைகளைத் தணிக்கவும் இந்தப் பேச்சுவார்த்தை நடவடிக்கை உதவக்கூடும் என்றும் இலங்கை அரசுக்கு எடுத்துரைக்கப்பட்டதாகவும் அத்தகவல் மேலும் கூறுகின்றது.

ஏற்கெனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தான் ஒரு தீர்வைத் தயாரித்துள்ளதாகவும் இந்திய அரசின்பார்வைக்கும் அதனை வழங்கியுள்ளதாகவும் தீர்வு தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் தான் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்றும் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்தோடு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தான் உத்தியோகப்பற்றற்ற முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேசியதாகத் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.